அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2004
மார்கழி
1973 டிசம்பர்

சமய பாட போதனைத் திங்களிதழ்

Acc. No. 34329



கொல்லூர் மூகாம்பிகை

அபிராமியம்மன் பதிகம்

—:×:—

கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர்
கபடு வாராத நட்பும்,
கன்றாத வளமையும், குன்றாத இளமையும்,
கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்புஅகலாத மனைவியும்,
தவறாத சந்தானமும்,
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்,
தடைகள் வாராத கொடையும்,
தொலையாத நிதியமும், கோணாதகோலும், ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்,
து யநின் பாதத்தில் அன்பும், உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்,
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே!

—அபிராமிபட்டர்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

சிவனடியார் வரலாறு

வாயிலார் நாயனர்

சொல்விளங்கு சீர்த் தொண்டை நன்னுட்டில், மன்னு சீர் மயிலைத் திருமாநகரில் பரம்பரைச் சிறப்பு மிக்க வேளாண் குலத்தில், அருள் தண்மை வாய்ந்த வாயிலார் என்னும் தபோதனர் நன்மைசான்ற நலம் பெறத் தோன்றினர். அவர் சிவத்தொண்டில் மிக விருப்பங்கொண்டு விளங்கினர்.

அவர் அறவாணனுகிய சிவபெருமானை, ஒரு பொழுதும் மறவாமல் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற தமது மனமாகிய கோயிலுள் எழுந்தருளச் செய்து, உறவாதிதனையுணரும் ஒளி விளக்குச் சுடர் ஏற்றி முடிவில்லாப் பேரானந்தமாகிய நீரால் திருமஞ்சனம் ஆட்டி, அன்பாகிய திருவமுதை நிவேதனம் செய்து வழிபாடியற்றி வந்தார்.

இவ்வாருக உள்ளம் மலர்ந்து அண்ணலார் தமை நாளும் தவருது நெடிது தவம் செய்திருந்து, சிவபெருமானது திருவடி நீழலே புகலாக அமைத்துக் கொண்டு தொழுதிருந்தார் புண்ணிய மெய்த் தொண்டனராகிய வாயிலார்.

நீடுமனமாகிய ஆலயத்துள், நீராரும் சடையராகிய சிவபெருமானை ஆராத அன்பினல் அருச்சனை செய்து அடியவர்பால் பேராத நெறிபெற்ற பெருந்தகையாராகிய வாயிலார் நாயனரைப் போற்றி வாழ்வாம்.

—மயிலேறி.

பிரமாதீச ஆண்டு மார்கழித் திங்கள் 17-ஆம் நாள் 1-1-74 செவ்வாய்க்கிழமையன்று வாயிலார் நாயனரின் திருநட்சத்திரமாகிய இரேவதி.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச மார்கழி 1973 டிசம்பர்	ஓசை 6

அருளோசை அன்பர்களுக்கு வணக்கம்

"அருளோசை" இதழ் வரவில்லை என்று பல அன்பர்கள் கடிதம் எழுதுகின்றனர். அவ்வாறு எழுதும் அன்பர்களில் பலர் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிடுவதில்லை. மேலும் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும் அன்பர்கள் பலரும் மணியார்டர் அடிக்கட்டையில் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிடுவதில்லை. சந்தா எண் குறிக்கப் பெருமல் சந்தாவைப் புதுப்பிப்பவர்களுக்குப் புதிய சந்தா எண் கொடுக்கப்பெறும். அப்படிக் கொடுக்கும்போது, ஜனவரியில் சந்தா முடிவடையும் ஒருவர் டிசம்பரிலேயே தன் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்வாராணுல் அவருக்கு டிசம்பர் இதழ் பழைய சந்தா எண்ணிலும் புதிய சந்தா எண்ணிலுமாக இரு இதழ்கள் வந்து சேரும். இதனுல் இருபாலும் இழப்பு ஏற்படுகிறது. எனவே இதனைத் தவிர்க்க அன்பர்கள் சந்தா புதுப்பித்து மணியார்டர் மூலமாகவோ, அல்லது சமப்பயரப்புநர்கள் மூலமாகவோ தொகையனுப்பும் போது தங்கள் சந்தா எண்ணைத் தவருது குறித்தனுப்ப வேண்டுகிரேம்.

மேலும் பேரவை வெளியீடுகள் மற்றும் சங்கத் தொடர்பான செய்திகளைத் தனித்தனித் தாளில் எழுதியனுப்பும்படி கேட்டுக் கொள்கிரேம்.

இனி "அருளோசை" உரியகாலத்தில் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிரேம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

அட்டைப் படம் :

கொல்லூர் மூகாம்பிகை. விளக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.

168-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஐயக்கொள்கையைப் பற்றிய மதிப்பீடு

ஐயக்கொள்கையைப் பொதுவாக நோக்கும்போது அது ஒப்புக் கொள்ளத்தக்க ஒரு கொள்கை என்று ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆயினும் ஐயக்கொள்கையைப் பயனற்ற கொள்கை என்று முழுமை யாகத் தள்ளிவிட முடியாது.

ஆராயாமலேயே எதையும் ஏற்றுக்கொள்வது என்ற கொள்கையைத் தகர்ப்பதற்குரிய வலிமை மிக்க ஆயுதமாக ஐயக்கொள்கை அமைகிறது. அது மட்டுமா! தான் கொண்ட முடிபே சிறந்த முடிபு என்ற ஒருவகைப் பிடிவாத மனப்பான்மையை-அடக்குவோரின்றி மதம் பிடித்துத் திரியும் காட்டானையைத் தடுத்து நிறுத்த வல்ல வலிமை வாய்ந்த அங்குசமே ஐயக்கொள்கை.

முடிப்புரை :

மேலே குறிப்பிடப் பெற்றவாற்ருல் அறிவாராய்ச்சியியலில் ஐயக் கொள்கை வகிக்கும் இடத்தையும், ஐயக்கொள்கையின் அடித்தளமான தூண்களையும், ஐயக்கொள்கையின் மதிப்பீட்டையும் ஓரளவு அறியலாம்.

சிவமயம்

திருப்பாவை

பண்டைக் காலத்திலே மைந்தரும் மகளிரும் விளையாடல் செய்கையில், வேறுவேறு ஆடல் இயன்றது. அவ்வியல்பால் ஆடலனைத்தையும் பெயரிட்டு வழங்கி அவற்றினை வேறுபடுத்துணர்த்தும் நிலை இன்றியமையாதாயிற்று. மக்கள் ஆடினும் தேவர் ஆடியனவாகக் கொண்டாடும் உயரிய நோக்கம் பெருகிற்று. அப்பெருக்கத்தால் மக்கள் கடவுட் பற்று வளரவும் நாட்டில் அதை வளர்க்கவும் பெற்றுக் கைகண்ட பயனாகப் பேரின்பம் உற்றனர். ஆடுவோர் ஆடக்கண்டு அறிவோர் பாடுவோர் பாடலைக் கேட்போர் எல்லார்க்கும் இன்பம் பெருக்கின அவை.

சிவக்கோலம், திருமால் வடிவம், மன்மதவேடம், திருவுருவம், முருகன் காட்சி முதலியனவாக அணிசெய்து கொண்டு சிவனாடல், திருமாலாடல், திருவாடல், மகனாடல், முருகனாடல் ஆகத் தாம் ஆடினர். தாம் ஆடினும் தமக்குள் நின்று அவ்வத் தெய்வம் ஆடியன ஆகவே வாய்மையாக் கொண்டு வரம் பல பெறுதல் வழக்கம் ஆயிற்று. ஆகவே அவ்வவ்வாடற்கு அவ்வத் தெய்வத்தின் பெயர் சார்த்து வழங்கினர். தனிப்பெயராலும் வழங்கினர்.

அவ்வாடல், நின்று ஆடல் விழுந்து ஆடல் என இருதிறத்துள் அடங்கும். பதினோராடல் சிறப்புடையனவாம். அவற்றுள் ஆறு நின்றாடலாம். ஐந்து விழுந்தாடுவனவாம். அப்பதினொன்றும் வகைக் கூத்து எனப்படும்." வகைக்கூத்தாவது

"பதினோ ராடலின் பகுதி யெல்லாம்
அதிரா வகைக்கூத் தாகும் என்ப"

என்று பழம்பாட்டிற்றொகையும் பெயரும் கூறுதல் காண்க,

"கடையம்அயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமால் அல்லியம்மல் கும்பம் சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவைஅரன் பாண்டரங்கம்
கொட்டிஇவை காண்பதினோர் கூத்து,"

என்பதும் உண்டு. இவற்றைத் தெய்வ விருத்தி என்றனர். கழகப் பதிப்பு (1969) 'சிலப்பதிகாரம்' பெருமழையுரையில், குடைகுடிமால் என்றுளது. மாலுக்குங் குடிக்கும் நெருக்கமான இயைபுண்டு, கும்பம்–குடம்.

பரதசேனாபதீயம் உரை பன்னிரு கூத்தும் அவற்றின் விளக்கமும் கூறும். மகாபரத சூடாமணி (கூத்துப் பதின்மூன்று என்னும், நின்றாடும் வகையுட்படுவன :—ஆறு)

1. அல்லியக்கூத்து, 2. குடைக்கூத்து, 3. குடக்கூத்து, 4. பாண்டரங்கம், 5. மறக்கூத்து. 6. கொடுகொட்டி.

'அல்லியம் கொட்டி குடைகுடம் பாண்டரங்கம்
மல்லுடன் நின்றாடல் ஆறு,' (மல்–மறம்)

என்றதுணர்க.

விழுந்தாடும் வகையுட்படுவன :—(ஐந்து) 7. பாவைக்கூத்து, 8. கடையம், 9. பேடு, 10. துடி, 11. மரக்கால்.

'துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து'

இவற்றை ஆடுந்தெய்வங்களேயும் தமிழர் உணர்த்தினர், சிவனு டல் :—பாண்டரங்கம், கொடுகொட்டி என இரண்டு. காபாலம் இதிற் சேரவில்லே,

அது பதினுென்றின் வேறு. முருகன் (செவ்வேள்) ஆடல். குடையுந் துடியும். திருமாலாடல் அல்லியமும் குடமும் மல்லும்(-மறமும்). திரு(மகள்) ஆடல் பாவை. விந்தை (வெற்றித்திரு விறன்மடந்தை, ஜயலக்ஷ்மீ) ஆடல் மரக்கால், அயிராணிஆடல் கடையம், கருவேள் (மன்மதன்) ஆடல் பேடு.

ஆடியோர் பெயரையும் இவற்றின் உறுப்புக்களேயும், ஆடற்பொருட் டையும், அடியார்க்கு நல்லார் தம் உரையுட் சான்றுடன் எழுதினுர். பரதசேனுபதீயம் உரையில் நல்ல விளக்கம் உளது.

'பாவை திருமகள் ஆடிற் றதற்குறுப்பு
ஓவாமல் ஒன்றுடனே யொன்று.'

என்னுமொரு குறள் அடியார்க்கு நல்லாருரையுட் காட்டப்பட்டது. இதனுல், 'திருப்பாவை' என்பது தோன்றிய காரணம் புலப்படும். பாவை என்பது பதினுெரு கூத்துள் ஒன்று. அதையாடிய தெய்வம் திரு(மகள்). திருமகள் ஆடிய காரணத்தால் 'திருப்பாவை' எனப்பெயர் உற்றது. உறவே, 'திருப்பாவை' என்ற தொகைச் சொல்லினது பொருள் திருமகள் ஆடிய பாவைக் கூத்து என்பதேயாகும்.

'திருவெம்பாவை' என்பது திரு ஆடிய எம்பாவை என்னும் பொருள் பயப்பதாகாது. பழம்பாடலாகக் குறிக்கப்படும் இரண்டும் 'எம்பாவை' எனப்பட்டனவேயன்றித் திருவெம்பாவை எனப்பட்டில.

திருவாசகத்துள் திருவகவல், திருச்சதகம் முதலாயினபோல அமைந் ததே திருவெம்பாவை. 'திருப்பாவை' என்னுந் தொகைச்சொற் பொருளுக்குள்ள நிலேயில் 'திருவெம்பாவை' என்றதன் பொருளேக் கருதலாகாது. திருப்பாவைத் தனியனே அருளியவர் ஆண்டாளம் மையார் பன்னியருளிய திருப்பாவை என்ருரே அன்றி ஆண்டாள் ஆடிய பாவை என்றிலர். திரு ஆடிய பாவை திருப்பாவை என்றதும் ஆண்டாள் பாடிய சங்கத்தமிழ்மாலே என்றதும் வெவ்வேறு என்னும் கருத்துப் புலனுதல் காண்க.

"திருப்பாவை" என்ற தொகைச் சொற்பொருள் இருதிறம் ஆயிற்று. ஒன்று திரு ஆடிய பாவை என்பது, ஒன்று பாவை (பாமாலே)க்குத் 'திரு' என்னும் சொல் அடையாதல். பாவை என்ற கூத்தின் பெயர்க்கு, அக்கூத்தாடிய 'திரு' என்ற வினே முதற் பெயரே அடையாயிற்று, திவ்வியப்பிரபந்தத்துள் விளங்கும் சங்கத்தமிழ்மாலேயைப் "பாவை" எனக் குறித்து, அதற்குத் திரு என்ற அடை கொடுத்தது பாமாலே என்னும் தொகைப் பெயர்ச் சொல்லுக்குத் திரு என்ற தனிச் சொல்லடை யாகும். ஆயினும், "திருவெம்பாவை"யினும் வேறு எனப் பிரித்துணரும் பொருட்டுத் 'திருவெம்பாவை' என்று பின்னர் வழங்கினர். ஆண்டாளம் மையார் "சங்கத்தமிழ்மாலே" என்றும் "எம்பாவை" என்றும் திருவுள்ளம் கொண்டருளினுர் என்றே தோன்றுவதால், "திருப்பாவை" என்ற பெயர் அது தோன்றிய காலந்தொட்டு வழங்குவதன்று. நாச்சியார் திருமொழி என்று வழங்கிய பெரியோர் ஆண்டாள் திருப்பாவை என்று வழங்குவரோ?

—"மணிமொழி"



அறிவாராய்ச்சியியலில்-ஐயக்கொள்கை

[வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்.,]

முன்னுரை :

அறிவாராய்ச்சியியலில் ஆதிக்கக் கொள்கையானது எத்தகைய சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதை முன்னர்க் கண்டோம். உண்மையை நிலைநாட்டும் பணியில் ஆதிக்கக் கொள்கையானது தம் பணியை வலுவாகச் செய்து வந்தது என்பதையும் சுந்தரர் வரலாற்ருல் அறிகிரும். அவ்வாறே அறிவாராய்ச்சியியலின் ஐயக்கொள்கையும் (Scepticism) ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதை ஒத்துக் கொள்ளவே வேண்டும். ஐயக்கொள்கைக்கும் அறிவாராய்ச்சியியலுக்கும் தொடர்பு உண்டா? என்று ஐயப்படுபவர்களும் உள்ளனர். ஐயமே அறிவுக்கு அடிப்படை என்று கருதுபவர்களும் உண்டு. இவ்வகையில் அறிவாராய்ச்சியியலில் ஐயக்கொள்கை எத்தகைய பணிபுரிகிறது என்பதைக் காணலாம்.

ஐயக்கொள்கை–விளக்கம்

இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றலே ஐயம் என்று கொள்ளுவர். கண்ணுற் காணப்பெறும் பொருள் ஒன்று கிடக்கிறது. அது ஓலையா பாம்பா என வரையறை செய்ய முடியாது தவிக்கும் நிலையை ஐயம் என வரையறுத்துக் கூறுவர். ஆனுல் ஐயக்கொள்கையினர் எழுப்பும் வாதம் வேறு வகையைச் சார்ந்தது. என்றும் மாருத, திட்டவட்டமான, ஏற்கத்தக்க அறிவு என்பது இல்லை என்பதே அது. இக்கருத்தை மேற்போக்காகக் கவனித்தால் ஐயக்கொள்கை என்று கூறுவதை விட, இன்மைக் கொள்கை (Nihilish) என்று கூறிவிடலாம். ஆனுல் அவர்கள் கூறும் வாதம் நுட்பமானது. அறிவு என்ற ஒன்றை ஏற்றுக்கொண்டு அதனுடைய உண்மைத் தன்மையை, திட்டவட்டமானது என்று சொல்லும் தன்மையை ஐயப்படுகின்றனர்.

உறுதியான, என்றும் மாருத உண்மை என ஒன்று இருக்க முடியுமா என ஐயுறுகின்றனர். அவர்கள் தம் கொள்கைக்கு ஆதரவாக இன்று நாம் காணும் விஞ்ஞான ஆய்வுகளை எடுத்துக் காட்டுகின்றனர். "இப்பூமியானது அண்டங்களுக்கெல்லாம் நடுவணதாக இருக்கிறது" என்று விஞ்ஞானம் கூறிய காலத்து உண்மையானது, மறுக்க முடியாதது, ஏற்கத்தக்கது, திட்டவட்டமானது என்றுதான் கருதினுர்கள். காலப்போக்கில் இக்கருத்தில் ஐயம் உண்டாயிற்று. ஆய்வு நிகழ நிகழ இது பிழை என்பது காணப்பெற்றது. சூரியனே நடுவணதாக விளக்குகிறது என்ற கருத்து இப்போது உண்மை என்று முடிவு செய்யப் பெற்றுள்ளது. இக்கருத்தே திட்டவட்டமானது என்று எப்படிக் கூறிவிட முடியும்! இனிவரும் ஆராய்ச்சிகள் இதனைப் பொய்யாக்கலாமே!

எனவே, இன்றைய நிலையில் திட்டவட்டமானது, மாருதது, ஏற்கத் தக்கது என்று கூறும் எந்தவோர் அறிவும் ஐயப்படுவதற்கு உரியது என்பதுதான் ஐயக்கொள்கையினர் எழுப்பிய வாதத்தின் தொடக்கம். அறிவாராய்ச்சியியல் இதனை ஏற்கத் தயங்கவில்லை. ஆனால் ஐயக்கொள் கையினர் எழுப்பிய வாதத்தின் வளர்ச்சி நிலைகளைத்தான் அறிவாராய்ச்சி யியல் ஏற்கத் தயங்கியது என்று கூறலாம்.

என்றும் மாருத, திட்டவட்டமான, ஏற்கத்தக்க அறிவு என்ற ஒன்றே இல்லை என்றும், இல்லாத ஒன்றை நாம் அடைவதே இல்லை என்றும் ஐயக்கொள்கையினர் முடிவு செய்து விடுகின்றனர்.

பிரெஞ்சு நாட்டுத் தத்துவ ஞானியாக விளங்கிய டேக்காரட் என்பார் என்றும் மாருத, திட்டவட்டமான, ஏற்கத்தக்க அறிவை நாம் பெற முடியும், கணக்குப் போன்ற அறிவியல் துறை இத்தகைய அறிவை நமக்கு வழங்குகின்ற ஆற்றலை உடையது என்று குறிப்பிட்டுக் காட்டினர். 'ஒன்றும் ஒன்றும் இரண்டு' என்ற உண்மை என்றும் மாருதது, திட்ட வட்டமானது, ஏற்கக் கூடியது என்ருர். இவ்வுண்மையை ஐயக்கொள் கையினர் மிக மிக எளிமையாக மறுத்து விட்டனர். ஒரு சொட்டுத் தண்ணீரும் ஒரு சொட்டுத்தண்ணீரும் கலந்தால் இரண்டு சொட்டுத் தண்ணீராக ஆகவேண்டும் என்ற நியதி இல்லை. ஒரு பெரிய சொட்டாக அமைந்துவிட முடியும். எனவே, கணக்குப் போன்ற துறைகள் தரும் முடிவுகள் கூட ஐயப்படுவதற்கு உரியவைகளே என்ற முடிவை வெளி யிட்டனர் ஐயக்கொள்கையினர். இந்த அடிப்படையில் மேலும் தம்மு டைய ஆய்வை நடத்திய டேக்காரட் அவர்கள் எந்த ஒன்றையும் ஐயுற லாம்; எந்தவொரு அறிவும் ஐயத்துக்கு இடமாக அமையலாம் என்று தம்முடைய ஆய்வின் மையமான வாதத்தை அறுதியிட்டுக் கூறி, இறுதி யாக ஐயத்துக்கே இடமில்லாத ஒன்று உண்டு என்ற முடிவுக்கு வந்தார். எந்த ஒன்றையும் ஐயப்படுகின்ற நான் அல்லது என் அறிவு உண்டு என்ற கருத்து ஐயத்துக்கே இடமில்லாத ஒன்று என்று வரையறை செய்தார்.

எல்லாவற்றையும் ஐயத்துக்கு இடமாக ஆக்கும் ஐயக்கொள்கை யினர் சிலவற்றை மட்டும் ஐயுறுவது இல்லை. அது விந்தையே. ஐயக்கொள்கையினர் தம்முடைய அறிவாற்றலை ஐயுறுவது இல்லை. தாங்கள் செய்யும் முடிவுகள் மற்றவர்களாலும் ஐயப்பட முடியுமே என்ற கருத்தை அவர்கள் ஏற்பது இல்லை. பிறருடைய கருத்துக்களை ஐயப் படுகின்ற அவர்கள் தாம் ஆதாரமாகக் கொள்ளும் வாதம், கொள்கை போன்றவைகளைத் திட்டவட்டமான உண்மையுடையவை என்று நம்பியே செயற்படுகிருர்கள்.

ஐயக்கொள்கையும் ஜைனசமய அறிவாராய்ச்சியியலும்

'Syad' என்ற பாலிச் சொல்லை ஜைனசமயம் தன் அறிவாராய்ச்சி யியலில் முக்கியச் சொல்லாகப் பயன்படுத்துகிறது இச்சொல்லை May be, Somehow, However என்ற ஆங்கிலச் சொற்களால் மொழி பெயர்ப்புச் செய்து விளக்குகின்ருர்கள். அவ்வாறும் இருக்கும் (அ) இருக்கலாம் எனத் தமிழில் கூறுவர். ஜைனசமயத்தின் இத்தகைய அறிவியற் கருத்தை ஐயக்கொள்கை என்று கூறுவோரும் உளர்.

ஜைனசமயத்து அறிவாராய்ச்சியியல் ஐயக்கொள்கையை ஒத்துக் கொள்வது அன்று. அது இரண்டு அடிப்படை உண்மைகளை வலி யுறுத்துகிறது. (1) உலகில் காணப்பெறும் எந்த ஒரு பொருளும்

எண்ணிக்கையில் அடங்காத பலவகைக் குணங்களைப் பெற்றிருக்கின்றன. (2) அவைகளை அறிய முற்படுகின்ற மனித அறிவு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்பட்டே விளங்க வேண்டிய கட்டாயத்தில் அமைந்துள்ளது. இவ்விரண்டு அடிப்படைகளால் எந்த ஒரு மனிதனும், எந்த ஒரு பொருளையும் பற்றிய முழுமையான, அறிவைப் பெற முடியாது என்பதே ஜைனசமயக் கொள்கை. திட்டவட்டமான, முழுமையான, என்றும் மாருத, ஏற்கத்தக்க அறிவை இந்த உயிர், இந்த உடம்பாகிய கட்டை நீக்கிக் கொண்டபின் பெறுவது உறுதி என்று ஜைனம் கூறுகிறது. மேலும், இவ்வுலகில் இவ்வுடம்பில் இருந்து பெறுகின்ற அறிவு ஐயப்படுவதற்குறியது என்பதை ஜைனம் வலியுறுத்தவில்லை. இந்த அறிவு முழுமையான அறிவு. நம்முடைய அறிவு முழுமையானதா பகுதியானதா என்பதே ஜைனசமய வினு. நாம் பெறுகிற அறிவு உண்மையானதே ஆனுல் அது ஒரு பொருளைப் பற்றிய முழுமையான அறிவன்று; பகுதியான அறிவு என்பதே. ஒரு மனிதன் ஒரு பொருளோடு ஒருவகையில் தொடர்பு கொள்ளுகிருன். அவன் கொள்ளுகின்ற தொடர்பை அடிப்படையாகக் கொண்டு அவன் பெறுகின்ற அறிவு அமையும். அவன் தொடர்பு கொள்ளாத பல பகுதிகள் அப்பொருளில் இருக்கின்றன. ஆகையால் அவன் பெற்ற அறிவு முழுமையானதன்று; பகுதிப்பட்டது என்பதே.

ஜைனர் எடுத்துக் காட்டும் உவமையை அறிதல் வேண்டும். ஒரு யானையைப் பத்துக் குருடர்கள் தொட்டு அறிகின்றனர். துதிக்கையைத் தொட்டவன் யானை 'பனைமரம்' போன்றது என்ருன்; காதைத் தொட்டவன் 'முறம்' என்ருன்; காலைத் தொட்டவன் 'உரல்' என்ருன். யானை இவர்கள் தொட்ட பகுதிகளையும் வேறு பகுதிகளையும் கொண்டது. யானையை முழுமையாகக் காணும் ஆற்றல் அக்குருடர்களுக்கு இல்லை. அவரவர்கள் யானையின் எந்த எந்தப் பகுதியைத் தொட்டார்களோ அந்த அந்தப் பகுதிகளைப் பற்றி அவரவர்கள் கூறிய கருத்துக்கள் உண்மையானவைகளே; ஐயுறவோ, மறுக்கவோ முடியாதவைகள். யானை உரல் போன்றும் இருக்கும், முறம் போன்றும் இருக்கும் என ஏற்றுக் கொள்ளும் முறையை ஜைனம் வற்புறுத்துகிறது.

ஐயக்கொள்கையின் தூண்கள்

ஐயக்கொள்கையினர் தம் கொள்கையை நிலைநாட்ட நான்கு வகையான முறைகளைக் கையாளுகின்றனர். அவைகளை ஐயக்கொள்கையைத் தாங்கும் தூண்கள் எனக் கருதலாம்.

(1) கருத்து வேறுபாடுகள்: கருத்து வேறுபாடுகள் அறிவு வளர்ச்சிக்குத் தேவையானவை. கருத்து வேறுபாடுகள் இல்லாத இடத்தில் சிந்தனையே இல்லை என்றும் அறிவு வளர்ச்சியே இல்லை என்றும் துணிந்து கூறலாம். ஆனுல், இத்தகைய கருத்து வேறுபாடுகளை ஐயக்கொள்கையினர் தமக்கு ஏற்ற சாதகமான முனைக்குத் திருப்பி விட்டுக் கொள்கின்றனர். ஒரே பொருளைப் பற்றி ஆராயும் பல்வேறு அறிவுத்துறை வல்லுநர்கள் தம் நுட்பமாகிய ஆராய்ச்சியின் பயனுகப் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றனர். ஒன்ருேடு ஒன்று ஒவ்வாத கருத்துரைகள் வெளிப்படுத்தப் பெறுகின்றன. பல்வேறு அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுவது வெளிப்படை.

அறிஞர்களிடையே கருத்து மாறுபாடும் கொள்கைகளிடையே முரண்பாடுகளும் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டி உண்மையான அறிவை, திட்டவட்டமான அறிவை, மாருத அறிவைப் பெறுதல் என்பது எப்போதும் இயலாத ஒன்று என ஐயக்கொள்கையினர் முடிவு செய்கின்றனர்.

துறைதோறும் காணப்பெறும் கருத்து வேறுபாடுகளை மனத்திற் கொண்டு உறுதியான உண்மை என்பதே கிடையாது என்றும் அதை நாம் பெறவும் முடியாது என்றும், மக்கள் எதிர்காலத்திலுங்கூட, திட்டமான அறிவைப் பெறமாட்டார்கள் என்றும் முடிவு செய்வது பொருந்தாதது ஆகும்.

(2) ஐயக்கொள்கையினர் அடுத்துக் கையாளுவது விவாதமுறை. சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு சில விவாத முறைகளைக் கையாளுகின்றனர். முறையான விவாதங்கள் மற்றவர்களின் கருத்தை விரைவில் இழுக்கக் கூடியவை. விவாதங்களின் மூலமாகச் சில பேருண்மைகளை ஆய்வு செய்ய முற்படும் போது மனித அறிவானது தன்னுடைய ஆற்றலின்மையை உணரத்தலைப்படுகிறது. எடுத்துக் காட்டாக, கடவுள் என்ற பொருள் உண்டு அல்லது இல்லை என்ற கருத்தை விவாத முறையில் சிந்திக்கும்போது, நம்முடைய அறிவின் ஆற்றலின்மையை நாமே உணர முடிகிறது. அறிவின் ஆற்றலின்மையை எடுத்துக் காட்டுவதன் மூலம் அறிவு நமக்கு உண்மைகளைத் தரும் ஆற்றல் உடையது அன்று என்று கூறிவிடுகின்றனர்.

அறிவு வளர்ந்து வருவதை நம்மால் உணரமுடிகிறது. நேற்று ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு ஆற்றல் இல்லாததாக இருந்த நம்முடைய அறிவே இன்று அதே சிக்கலைத் தீர்த்து விடுவதை அனுபவத்தில் காணமுடிகிறது. அறிவு தொழிற்படும் பொழுது இடர்ப்பாடுகள் தோன்றுவது கண்கூடு. ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் தன்மையுடைய அறிவை ஆற்றல் இல்லாதது என்று துணிவது பொருத்தம் உடையது அன்று.

(3) ஐயக்கொள்கையினர் அடுத்துக் கையாளுவது புறவுலகைப் பற்றிய வாதம். நமக்கு அயலாக நம்மால் காணக்கூடிய உலகைப் பற்றிய உண்மையான அறிவை நாம் எக்காலத்தும் பெறமுடியாது என்பதே. புறவுலகைப் பற்றிய அறிவு எதுவாக இருந்தாலும் அதை உண்மை என்று கொள்ளமுடியாது. நாம் கேட்கும் ஒலிகள், காணும் நிறங்கள், உணரும் வடிவங்கள், வன்மை மென்மைகள், சுவைக்கும் சுவைகள், முகரும் மணங்கள் ஆகிய புலனுணர்ச்சிகள் யாவும் நம்மிடத்து விளையும் மாற்றங்களே. புறவுலகில் நிகழ்வனவற்றை நாம் உள்ளவாறு அறிகிறோம் என்று கூற இடம் இல்லை. புறவுலகு நமது காட்சியில் உள்ளவாறு பிரதிபலிப்பது இல்லை. புறவுலகு பற்றிய உண்மைகளை நம்முடைய புலன்கள் நேரே அறிய முடியாது; கருவிகளின் துணை கொண்டே அறிய வேண்டும். புறவுலகைப் பற்றிய நம்முடைய அறிவு அடிக்கடி மாற்றங்கட்கு உட்படுவதை நாம் காணமுடிகிறது. மாற்றங்களுக்கு உட்படும் அறிவு உண்மை அறிவாக இருக்க முடியாது. எனவே அனுபவ அறிவு அனைத்துமே உண்மை என்றும் உறுதியாக நம்பக் கூடியது என்றும் கருதமுடியாது. இதுவே ஐயக்கொள்கையினரின் வாதம்.

(4) ஐயக்கொள்கையினர் கூறும் நான்காவது வாதம் நம்முடைய மனத்தை அடிப்படையாகக் கொண்டது.

எத்தகைய சமயத்திலும் நாம் நிகழ்காலத்திலேயே இருக்கிறோம். இறந்த காலம் என்பது சென்று விட்ட ஒன்று. அதன் அடிப்படையில் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியாது. எதிர்காலம் என்பதைக் கற்பனை என்றுதான் கொள்ளவேண்டும். இதனால் மனத்தில் அமைந்துகிடக்கும் நினைவுகளை வைத்துக்கொண்டு எதிர்கால உண்மைகளை வரையறுப்பது பொருந்தாது.

162-ஆம் பக்கம் பார்க்க

உ

சிவமயம்

 

சிவ லிங்கம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(3)

முன்னர்ச் சிவலிங்கம் என்றதன் பொருளை உணர்த்துமிடத்தில், ‘நீள்நாகம் பூண்டார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்’ (பெரியபுராணம்) என்னுந் தொடர்ப் பொருள் விளக்கத்தில், குறி (லிங்கம்) என்பது தெளிவிக்கலாயிற்று. சிவபரம் பொருளை உயிர்கள் உணர உணர்த்தும் வண்ணம் அமையும் ஒவ்வொன்றும் ‘குறி’யே ஆகும். அக்குறிகள் இரு திறப்படும்; அசித்து (ஜடம்) சித்து என்று. உலகமும் உலகிற்காணப்படும் பொருள்களும் ஆகிய அசித்துக்கள் எல்லாம் சித்தாகிய திருவருளையும் சித்தாகிய உயிர்களையும் போல்வன ஆமோ? ஆகா. உயிரும், சித்து, திருவருளும் சித்து. இரண்டும் ஒன்றோ !

சிவன் சீவன் என்ற இரண்டும் சித்து. ஆதலின் (இரண்டும்) ஒன்றாம் என்னில் ஒன்று ஆகா. சிவன் அருட்சித்து இவன் (அவ்) அருளைச் சேரும் சித்து. இவ்வேறுபாடு இருத்தலால் சிவனும் சீவனும் ஒன்றாகா எனச் சித்தியாருட் கிளந்தோதப்பட்டது. சிவஞான முனிவர் திருப்பாதிரிப்புலியூரில், பாடியதில்

“வரையேல் தவிட்டமுதம் சேந்தன் இட அருந்தினை
வல்லினமென்றாலும்
உரையேறவிட்ட முதலாகுமோ? எனைச்சித்தென்று
உரைக்கில் என்னும் ?”

என்றார். இதில் ‘வல்லெழுத்தென்ப கசடதபற’ என்று தொல்காப்பியத்திற் கண்டபடி, வல்லெழுத்தாறனுள் அடங்கினும் ட், ற் இரண்டும் ஏனைய நான்கற்கும் ஈடாகுமோ? மொழி முதலாகும் சிறப்பு முதலியன அவ்விருபுள்ளிக்கும் இல்லையே! இங்கு நன்னூலிலுள்ளபடி வல்லினம் என்றார் முனிவர். அவை ஆறும் இனம் அல்ல, வல்லினம், மெல்லினம், இடையினம் என்று குறித்ததே குற்றமுடையது. ஆசிரியர் தொல்காப்பியர் குறித்தவாறு வல்லெழுத்து மெய்யெழுத்து இடையெழுத்து என்றலே தொல்லாசிரியர் இட்ட நல்லாற்று வழக்கு.

‘ஞநமுன் தம்மினம் யகரமொடு ஆகும்’ என்ற நன்னூற் சூத்திரத்தின் கருத்தை இனம் என்ற சொல் கெடுத்தல் காண்க. ‘மிசை’ என்றால் அக் கேடு இராது. ‘ணனமுன் இனம் கசஞபமயவவ் வரும்’ என்றதும் அன்னதே, மரபு வழுப்பட்டுப் பொருள் வழுப்படும் கேட்டையும் விளைத்தது. முனிவரும் வல்லினம் என்றது வியக்கத்தக்கதே.

அசித்தாயகுறி சித்தாயகுறி என்று இருதிறத்துள் அசித்தை விலக்கிச் சித்தை அறியும் பொருட்டு, முன்னோர் கிளந்தோதினர், அக்கிளவியே ஞானக்குறி, அருட்குறி, அருண் ஞானக்குறி என்னும் வழக்காலுணரப்படும். ஞானலிங்கம் என்பதே பொருள். சிவஞான சித்தியார் (300) உரையிலே முனிவர்,

“மேல் 1. ஐந்தெழுத்தால் அமைந்தவுரு எனக்கூறி அதன்பின் 2. ஆன்மாவில் அர்ச்சித்து எனவும் கூறி, ஈண்டுச் 3. சத்திமூர்த்தி என்றல் மலைவாம் போலும் எனின், ஆகாது. அம்மூன்றும் முதல்வனுக்கு முறையே தூலவடிவம் சூக்குமவடிவம் அதிசூக்குமவடிவம் எனக் கோடலால் என்பது” என எழுதினர்.

இதிலே ஐந்தெழுத்து. தூலலிங்கம், ஆன்மா சூக்குமலிங்கம், சத்தி அதிசூக்குமலிங்கம் என்னும் உண்மையை உணர்க.

இம்மூன்றும் சிவலிங்கம் என்றுணர்வது எல்லார்க்கும் எளிதன்று. சிவஞானச் செல்வம் சிறிதேனும் தேடிநாடிச் சேர்த்து வைப்பவர்க்கே எளிது.

எழுத்தென்றும் அஞ்செழுத்தென்றும் நாமம் என்றும் செய்யுளில் வழங்குமிடத்திலெல்லாம் திருவஞ்செழுத்து, திருவைந்தெழுத்தருள் திருவைந்தெழுத்தருணிலை என்று அதன் உண்மையுயர்ச்சி யுள்ளத்து வரச் சொல்லியோ நினைந்தோ உயிர்க்குறுதி தேடிக்கொள்ளும் சைவ மரபு போற்றிக் கொள்ளத்தக்கதாகும். திருவருட்பயனிலே ஒன்பதாவது தலைப்பு, ‘அஞ்செழுத்தருணிலை’ என்றதை நினைவார்க்கு இது புலனாகாதிராது. அஞ்செழுத்தை அருள் என்றலும், அவ்வருணிலையை அப்பத்துத் திருக்குறளும் உணர்த்தும் என்றலும் சிவஞானத்தோர் நன்குணர்வர்.

‘சி’ என்ற ‘மிகுபஞ்சாக்கரம்’ முதலில் நினைவில் வரும் தூலலிங்கம். அடுத்து ஆன்மாவில் அத்தூலலிங்கத்தில் தோன்றும் சிவபரஞ்சுடர் சூக்குமலிங்கத்தில் விளங்கும் உணர்வாகின்றது. அவ்வுணர்வே சத்தி. அதுவே அதிசூக்குமலிங்கம்.

> “பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற அருளால் ஆங்கே
> குறியொடும் அஞ்சவத்தை கூடுவர் வீடுகூட.” (225)

எனக் ‘குறி’ என்பது அடையொன்றும் இன்றி இங்கு நின்றது.

‘அறிவது ஒரு குறி குருவினருளினாலடைந்து மன்னு சிவன்றனை யடைந்து நின்று’ என முன்னும் பின்னும் கிளந்தோதப்பட்டது.

‘அருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே’ என்புழிக்குறி இன்னது எனப் புலப்படுத்தியருளினர் ஆசிரியர் அருணந்தி தேவநாயனர்,

இத்துணை விளக்கம் உறுத நிலையில், “குறியதனால் இதயத்தே அரனைக் கூடுங்கொள்கை” எப்படி உணரப்படும்? உணர்ந்து கூடும் அநுபவம் வாய்க்குமோ? இதுகாறும் கூறியவாற்றாலே சிவலிங்கம் சித்து அசித்து என இரு திறமாயிருப்பதும், சித்தாய சிவலிங்கம் ‘அருட்குறி’ ‘ஞானலிங்கம்’ எனப்பிரித்துணர்த்தவும் உணரவும் படுவதும் “அருண்ஞானக் குறி”யே ஆன்மாவின் இதயத்தே அரனைக் கூடுங் கொள்கையின் இயல்வதும் அஞ்செழுத்தருணிலை சாதனமாவதும் ஓராற்றான் விளக்கப்பட்டன.

"பருவஞ்சேர் உயிர்க்குத் துங்கவரன் ஞானக்கண் கொடுத்து அருளி னாலே சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்" என்றதில் அதையே 'ஞானக்கண்' என அறி கருவியாகக் கூறியதும் காண்க. திருவருட் பயனில், 'காணுங் குறியாகி நீங்காத கோ என்று கூறியதும் ஈண்டுணர் தற்பாலது. இக்குறியையுங் கடந்து சிவத்தை அடைதல் வேண்டுமா தலின், பட்டினத்துப் பிள்ளையார், 'தாயை மறந்து' என்றார். குறியொடு தாம் அழியும் நெறியதனுல் சிவமேயாய் நின்றிடுவர் என்ருல், நேசத் தார்த் தொழுதிடுநீ பாசத்தார் விடவே' என்ற சிவஞானசித்தி முடிவை ஓர்க.

இச்சித்துருவாய லிங்கம் மூன்றனுலும் சிவனை அடைதலே முடிவாய நெறியொழுக்கமாகும். ஆகவே "உண்மை விளக்கம்" அஞ்செழுத் துருவாய் ஆன்மாவில் அருண்ஞானக்கூத்து நாதாந்தத்தில் நிகழு மாறுணர்த்திப் பக்குவான்மாக்களுக்கு வீடு பேருக்கம் உபதேசித்தது.

"நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்ருடல் உள்ளபடி பெற்றிட."

அந் 'நாதாந்த நாடகத்தை நன்ரு அருள் செய்'தது அவ்வுண்மை விளக்கம். அவ்வருணூலுக்கு நாம் எழுதிய பேருரையுள்ளே நாதாந்த நாடகத்தை மெய்ந்நிலையில் விளக்கவில்லை. காரணம்:—அக்காலத்தில் இவ்வநுபவம் இன்மையேயாகும். உண்மை விளக்கத்தில் உணர்த்திய 'நாதாந்த நாடகம்' சிவாநுபவவுண்மையாதலின் அதனைத் தெளிந்து உரையெழுதப் புண்ணியம் அக்காலத்தில் இல்லாததும் ஒரு காரணம் ஆகும்.

ஆன்மா அநாதியே சிவனுடைமை; சிவன் ஆன்மாவாகிய உடை மையை அநாதியே உடையவன். குருவாய் வந்து ஆண்டான். அநாதியுடைமையும் ஆண்டகாலத்திருந்து அடிமையும் ஆகும் ஆன்மா வுக்கு, சிவன் அநாதியுடையவனும், குருவாயுபதேசித்த காலம் முதல் ஆண்டானும் ஆவன். ஆய அதனுல், அச்சிவனுகிய உடையானை ஆண்டவனை வழிபடும் கடன்மையுடையன ஆன்மாக்கள். ஆன்மாக் களை ஆர்த்த பிறவித்துயர் அகலக் காத்தல் அவ்வாண்டவன் கடன். அக்கடன்மை இருதிறத்தும் உளது. அதை நிறைவுறுத்த ஆண்டவன், தான் ஆண்ட ஆன்மாவின் உள்ளே அகலாதுள்ளான். அம்பிகை யோடுள்ளான். எவ்விடத்தும் உள்ளான். எக்காலத்தும் உள்ளான். அப்படி உள்ளதால்தான், உயிர்க்கு நலஞ்செய்யவும் நலம்பொலஞ் செய்தலை அறியவும், அறிந்து வினைப்பயனை நுகர்விக்கவும் இயலும். அவ்வியற்கையில்

'தம்மிற் சிவலிங்கம் கண்டுஅதனைத் தாம் வணங்கித்
தம்மன்பாம் மஞ்சனநீர் தாமாட்டித்-தம்மையொரு
பூவாக்கிப் பூவழியாமற் கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே யுளன்.'

என்னுந் திருக்களிற்றுப் படியார்-திருவெண்பா (44)வில் உள்ளபடி, சிவலிங்க வழிபாடு செய்தல் வேண்டும்)

இஃது ஆன்மலிங்கத்தில் செய்யும் உயரியதொரு வழிபாடு, உலகில். சிவலிங்கம், ஞானலிங்கம், ஆன்மலிங்கம், பரமலிங்கம், சாந்தலிங்கம், மகாலிங்கம், மணிலிங்கம், என்பனவும் மக்கட்குப் பெயராக இட்டு வழங்குதல் எல்லார்க்கும் தெரிந்ததே. இப்பெயரிலே திருநகர்ப் பெயரோடு சேர்த்துக் காளத்திலிங்கம், குற்ருலலிங்கம், கூடலிலிங்கம் என்பர். திருக்கோயிற் பெயரோடு சேர்த்துச் சிதம்பரலிங்கம், சிவாய லிங்கம், வழிபட்டோர் திருப்பெயரோடு சேர்த்து அகத்தியலிங்கம்,

குமாரலிங்கம், பிரமலிங்கம், நாகலிங்கம்; சிறப்புணர்த்தும் வண்ணம் அட்சயலிங்கம், அமிர்தலிங்கம், ஆனந்தலிங்கம், மகாலிங்கம், ஞானலிங்கம் முதலியனவாகப் பெயர் வழங்குதல் இன்றுமுண்டு,

சிவஞானசித்தியார் (சூ. 9 திருவிருத்தம். 3) மறைஞானசம்பந்தர் உரைமேற்கோள் பஞ்சாக்கரதரிசனம் என்று மூன்று பாடல் உள. அவற்றையும் இங்கு நினைவு கூர்தல் நன்று.

தூலபஞ்சாக்கரம்

"யகாரம் இலிங்கமாம் நாளம் வகாரம்
சிகாரம்மேற் பீடம் தெரிக்கின்–மகாரம்தான்
கண்டமே யாகும் கவின்ஆர் அடிப்பீடம்
பண்டிகழும் நஂகான்ஆம் பார்."

இதன் பொருள் உண்மைவிளக்கத்துள் 'ஆடும்படி கேள்' என முதலும் திருவெண்பாப் பொருளேயாம்.

"நகரமே சத்தியோ சாதமுகம் நாடின்
மகரந்தான் வாமம் மதிக்கில்–பகருங்கால்
சிகாரம் வகாரம் அகோரம் புருடம்
யகாரம்ஈ சானமுகம் என்."

இதன் பொருள் :—

கருமசாதாக்கியத்தின் ஐந்து திருமுகத்துள் மேற்கில் சத்தியோ ஜாதம். (ந.) வடக்கில் வாமதேவம். (ம) தெற்கில் அகோரம் (சி) கிழக்கில் தற்புருடம் (வா) உச்சியில் ஈசானமுகம் (ய).

சிவவாக்கியர் பாடல்

நவ்விரண்டு காலதாய் நவின்றமவ்வு வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்வுமேலே முடியதாய் எழுந்துநின்ற நேர்மையைச்
செவ்வன் ஒத்ததாம் நமச் சிவாய அஞ்செழுத்துமே.

இதன் பொருளை மக்கள் வடிவாகத் தோன்றுமாறு பாம்பனடிகள் திருப்பாவுட் காட்டியவாறறிக. அது பொருந்துமா? பொருந்தாதா? இவ்வாராய்ச்சி வேண்டா. உபதேச வாயிலான் அறியத் தக்கது அது. முத்திநெறியுண்மைகளைக் குருவருளால் தெளிந்து கொள்ளல் வேண்டும் தானே முற்றுணர்வினனென்று எண்ணிச் சிற்றுணர்வு தோன்ற எதையும் எழுதத் துணிதல் நன்றுமோ? பிறர்க்குத் தெளிக்கும் முன் அதனைத் தான் தெள்ளுதல் வேண்டும்.

"உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே"

எனக் குமரகுருபர முனிவரர் அருளியதை அறிக. ஐந்தொழிலும் தடத்த நிலையில் சிவனுருவம் ஆதலின், அத்தொழிலேந்தானும் உலகப்படைப்பு முதலிய சித்திரம் உண்டாதலின் இலிங்கம் எனப் பெயராயிற்று, லிங்க-சித்திரித்தல் என்னும் பொருட்டு. இப்பொருள் முன் எழுதிய விளக்கம் அனைத்துக்கும் ஏலாது. (பஞ்சகிருத்தியம்–) ஐந்தொழிலோவியம் ஒன்றனை மட்டும் குறித்த பொருட்டு. குறியென்ற பொருளில் யாண்டும் செல்லும் அச்சொல், ஈண்டு ஒரு குறித்த நிலையில் மட்டும் அப்பொருட்டாதலை உணர்தல் நன்று. விரிவஞ்சி இதனோடு முடிக்குதும்.

சிவலிங்க வழிபாடு செய்துய்க உலகெலாம்.

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

6. சந்தான குரவர் கால ஆராய்ச்சி

மெய்கண்டார் அருணந்தி சிவாச்சாரியார் காலம்: கல்வெட்டுச் சான்று:

மெய்கண்டார் சிவஞான போதத்தை இயற்றிய காலம் எது என்பது பற்றிச் சிந்தித்து முடிவு கண்ட பெரியோர் பலர் ஆவர். கி.பி. 13ஆம் நூற்றாண்டே மெய்கண்டார் காலம் என்பது வரலாற்றால் விளங்கப் பெறுவதாகும். மூன்றாம் இராசராசசோழன் கி.பி. 1216 முதல் கி.பி. 1256 வரை சோழ நாட்டை ஆட்சி செய்த பெருமன்னன் ஆவன்: இப்பெருமன்னன் காலத்து வெட்டப் பெற்ற கல்வெட்டொன்று திருவண்ணாமலையில், அருணாசலேசுவரர் திருக்கோயிலில் காணப்படு கின்றது. இது அரசினரால் வெளியிடப் பெற்ற 'தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்' என்னும் பெருநூலின் எட்டாம் தொகுதியில், எழுபத்துநான்காம் எண்ணுடன் காணப்பெறுகின்றது. (South Indian Inscriptions—Vol. VII. No. 74).

மூன்றாம் இராசராசசோழனின் பதினாறுவது ஆட்சியாண்டில், திருவெண்ணெய்நல்லூர், மெய்கண்டதேவர் என்ற சான்றோர், திருவண்ணாமலையைச் சேர்ந்த மாத்தூர் எனப்படும் இராசராச நல்லூரில் 'மெய்கண்ட தேவப் புத்தேரி' என்ற ஏரி ஒன்றை வெட்டு வித்தனர்; அவ்வூரில் மெய்கண்டேச்சுரம் என்னும் சிவன் திருக்கோயில் ஒன்றை அமைத்தனர்; அதற்கு நாள்வழிபாட்டிற்காகக் கட்டளை ஆக்கினர்; ஓர் ஆண்டிற்கு நானூறு கல நெல் வருவாய் வரக் கூடிய ஐந்துவேலி நிலத்தைத் தேவதான இறையிலியாக வழங்கினர்-என்பன இக்கல்வெட்டினால் விளங்கப்பெறும் செய்திகள். கி.பி. 1216ஆம் ஆண்டில் மூன்றாம் இராசராசன் அரியணை ஏறியவன் என்பது வரலாற் றாசிரியரால் உறுதி செய்யப்பட்டிருத்தலால், கி.பி. 1232ல் (ஆட்சி தொடங்கிப் பதினாறாம் ஆண்டு) திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் தம்பெயரால் ஏரியும், திருக்கோயிலும் மாத்தூரில் அமைத்தனர் என்பது இனிது விளங்குகின்றது.

மெய்கண்டாருடைய காலம் இவ்வாறு கி.பி. 13ஆம் நூற்றாண்டு என்று செம்மையாக முடிவு செய்யப்பெற்றதனால், இவரிடம் ஞான உபதேசம் பெற்ற அருணந்தி சிவாசாரியார் காலமும் இதுவேயாகத் துணியலாம்.

மறைஞானசம்பந்தர் உமாபதியார் காலம்:

அருணந்தி சிவாசாரியரிடம் மாணாக்கராக இருந்த மூன்றாம் குரவராகிய மறைஞானசம்பந்தர் வாழ்வும் சற்றேறக் குறைய இக்காலத்தையே ஒட்டி இருக்கக் கூடும் என்று முடிவு போக்கலாம். இனி மறைஞானசம்பந்தரால் 'பட்ட கட்டையில் ஏறிப் பகற்குருடு ஏகுதல் பாரீர்' என்று சுட்டப் பெற்று அறிவு தெளிந்த உமாபதி சிவாசாரியார், தம் சித்தாந்த நூல் எட்டனுள், 'சங்கற்ப நிராகரணம்' என்ற சாத்திர நூலில் அக்காலக் குறிப்பொன்றைச் சுட்டுகின்றார்.

அந்த நூலைத் தாம் எழுத நேர்ந்த காரணத்தை அந்நூற் பாயிரத்தில் கூறியுள்ளார். சிவாகம நூல்கள் அனைத்தையும் கற்றுணர்ந்த எண்மர் சகாத்தம் 1235ல், தில்லையில் ஆனித்திருவிழா ஆரும் நாளில் தேர் மண்டபத்தில் வரிசையாக அமர்ந்திருந்தனர்.

அப்போது மாயாவதி ஒருவரும் மெய்கண்டாருடைய அருள் பெற்ற ஒருவரும் அங்கு இருந்தனர். அப்போது, 'வீடுபேறு எய்துதற்கு உரிய நன்னெறி யாது' என்று உண்மை ஆர்வத்துடன் ஒருவர் வினவினர். மாயாவாதியார் தம் கருத்தை எடுத்து மொழிந்தனர். அவரது மொழியை மறுத்து, மற்றொரு மதத்தினர் தம் கொள்கையை நிறுவினர். இவ்வாறு ஒவ்வொருவரும் தந்தம் கொள்கையை நிறுவிய பின்னர், இறுதியாக மெய்கண்டார் அருள் பெற்ற ஒருவர், ஒவ்வொருவர் கூற்றிலுமுள்ள குற்றங்களைக் காரணம் காட்டி மறுத்துத் தெளிவுபட முடித்தனர். அவர் உணர்த்திய உண்மையைத் தெரிவிக்கும் பொருட்டே 'சங்கற்ப நிராகரணம்' எழுதப்பட்டதாக அந்நூற் பாயிரம் அறிவிக்கின்றது. இப்பகுதியில் வரும்,

> " ஏழஞ் சிருநூறு எடுத்த ஆயிரம்
> வாழுநற் சகனம் மருவா நிற்ப "

என்ற வரிகளாற் சுட்டப்படுவது சகாப்தம் 1235 என்பதே ஆகும் என்றும், அதற்குச் சரியான ஆண்டு கி.பி. 1313 என்பதே என்றும் அறிஞர் கூறுவர். இதனால் உமாபதியார் வாழ்ந்த காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று துணியலாம். ஆதலால், மெய்கண்டார் உமாபதி சிவம் வாழ்வதற்கு எண்பத்தோராண்டுகட்கு முன் இருந்தவர் என்று கூறுவது முற்றிலும் மெய்மையாக இருத்தலை அறியலாம்.

இங்ஙனம் இக்கல்வெட்டொன்றினால் நம் சைவசமய சந்தான குரவர் நால்வரின் காலத்தையும் முற்றிலும் பொருத்தமாக அறிய முடிவது தமிழகம் செய்த தவமே என்று கூறவேண்டும். ஆதலால் சந்தான குரவர் காலத்தை இனிதறியும் இக்கல்வெட்டுத், தமிழ் இலக்கிய வரலாற்றிற்கும், சித்தாந்த சைவச் செந்நெறி வரலாற்றிற்கும் எத்துணை இன்றியமையாதது என்பது கூறாமலே விளங்கும்.

திருவண்ணாமலைக் கல்வெட்டின் முழுவடிவம் :

தனிப்புகழ் பெற்றுள்ள இக்கல்வெட்டின் முழுவடிவம் பின்வருமாறு :

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு 16-வது இஷபநாயிற்று இருபத்தெட்டாந் தியதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரீஷத்து நாள் உடையார் திருவண்ணாமலை உடைய—

நாயனார்கோயில் சீமாகேஸ்வரக் கண்காணி செய்வார்களும் தேவர்கன்மி கோயிற் கணக்கனும் திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசா—

வது இந்நாயனார் தேவதானம் செங்குன்ற நாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்டதேவப் புத்தேரிக்குக் கடமையிறுக்குமிடத்து திருத்தின ஆண்டு குழி நாழியும் பாடிகாவலும் கொள்ளக் கடவதாகவும் இதன்—

எதிராமாண்டு கால் வரிசையும் பாடிகாவலும் இருக்கக் கடவதாகவும் இதன் எதிராமாண்டுமுதல் காலே அரைக்கால் வரிசையும் பாடிகாவலும் உட்பட வேலி எண்பதின்கலம் இறுக்கக் கடவ தாகவும் இவ்வேந்தலுக்கு எல்லை அரசுக்குக் கிழக்கு நீரேறின—

நிலம் திருத்திப் பயிர் செய்யக் கடவதாகவும் இவ்வேந்தலுக்குப் புன்செய் நிலம் அரசுக்குக் கிழக்குத் திருக்கோவலூர்ப் பெருவழிக்கு வடக்கு இவ்வேந்தலைச் சூழ்ந்த நிலத்திலே அஞ்சுவேலி தரை எல்லை யாய் பண்டாரத்துக்குக் கடமை இறுக்கக் கடவதாகவும் இவ்வேந்தலில்—

திருத்தப்பட்ட நிலத்திலே இவ்விராசராச நல்லூரில், எழுந்தருளு விக்கிற உடையார் மெய்கண்டீசுவரமுடைய நாயனுர்க்குப் பூசைக்கும் அமுதுபடிக்கும் மூன்றில் ஒன்று தேவதானமாகவும் இவ்வேரிக்கு ஏரிப்பட்டி மன்ருட்டுப் பட்டியுமாக ஐஞ்ஞூறு குழி விடக்கடவதாகவும் இவ்வேந்தல்—

தம்பொருளிட்டு வெட்டுகிற நிலம் இவ்வேரியும் நிலமும் குடி நீங்கா தேவதானமாய் இவர்க்குச் சந்திராதித்த வரையும் காணியாய் விற்றெற்றிப் பரிக்கிரகஞ் செல்லக் கடவதாகவும் இப்படிச் சம்மதித்துக் கல்வெட்டிச் கொடுத்தோம் இவ்வனைவோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை."

7. சந்தான குரவர்-அருணூல்களும் அரும்பொருளும்

1. சிவஞானபோதம் :

சைவசித்தாந்தச் சாத்திர நூல்களுள் தலைமை வாய்ந்தது சிவஞான போதம் ஆகும். இந்நூலை மெய்கண்டார் அருளி மெய்கண்ட நூல் களுக்குத் தோற்றுவாய் செய்தருளினர். பன்னிரண்டு நூற்பாக்களும், அவற்றைத் தகுந்த ஏதுக்கள் கொண்டு விரித்துரைக்கின்ற முப்பத் தொன்பது அதிகரணங்களும், எடுத்துக் காட்டாகக் காட்டப்பெற்றுள்ள எண்பத்தொரு வெண்பாக்களும் கொண்டது சிவஞானபோதம். இந் நூலின் முதல்நூற்பா இறைவன் உண்மையையும், இரண்டாம் நூற்பா தளை உண்மையையும், மூன்ரும் நூற்பா உயிர் உண்மையையும் முறையே மொழிகின்றன. நான்காம் நூற்பா உயிர் இலக்கணமும், ஐந்தாம் நூற்பா தளை இலக்கணமும், ஆரும் நூற்பா இறைவன் இலக்கணமும் இயம்புகின்றன. முத்தி பெறுதற்கு ஏதுவாகிய உயிரின் சிறப்பிலக் கணத்தை ஏழாம் நூற்பாவும், சிவஞானத்தை உயிர் உணரும் முறையை எட்டாம் நூற்பாவும், உயிர் பாசஞானத்திற்கு மீளாதவாறு புனிதமாக் கும் முறையை ஒன்பதாம் நூற்பாவும், பாசநீக்கம் பண்ணும் முறையைப் பத்தாம் நூற்பாவும், உயிர் அயரா அன்பினல் இறைவனுடைய திருவடி யாகிய சிவானந்த அநுபவம் எய்துவதைப் பதினேராம் நூற்பாவும், சீவன் முத்தர் நிலையைப் பன்னிரண்டாம் நூற்பாவும் விளக்குகின்றன.

முதல் ஆறு நூற்பாக்களும் 'பொது அதிகாரம்' எனப்பெறும்; இதனுள் முதல் மூன்று நூற்பாக்கள் 'பிரமாண இயல்' என்றும், அடுத்த மூன்று நூற்பாக்கள் 'இலக்கண இயல்' என்றும் கூறப்பெறும்.

பிந்திய ஆறு நூற்பாக்களும், 'உண்மை அதிகாரம்' எனப்பெறும்; இதனுள் முதல் மூன்று நூற்பாக்கள் 'சாதன இயல்' என்றும், அடுத்த மூன்று நூற்பாக்கள் 'பயன் இயல்' என்றும் கூறப்பெறும்.

சித்தாந்த சைவத்தின் அடிப்படை உண்மைகளையும் முடிநிலைத் துணிவுகளையும் முப்பத்தொன்பது 'அதிகரணங்கள்,' உணர்த்துகின்றன என்று மெய்ந்நூலறிஞர் பாராட்டிப் புகழ்வர். அத்துணை அளவிற்குச் சுருங்கிய நிலையில் திட்பநுட்பம் சிறந்து விளங்குகின்றன சிவஞான போத 'அதிகரணங்கள்.'

முதல் நூற்பா :

உலகம் அவன், அவள், அது என்று சுட்டி அறியப்படுவது; அதனால் அது தோன்றி நின்று மறைந்து மீளத் தோன்றுவது ஆக உள்ளது என்பது விளங்கும். இத்தகைய உலகை நியமித்து ஒழுங்குற நடத்தி வரும் முதல்வன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவன் சுட்டி அறியப் படாதவனாக-எத்தகைய மாறுதலும் இல்லாதவனாக-எல்லா உலகங்களை யும் ஒருங்கே ஒடுக்கி ஒருங்கே தோற்றவல்லவனாக இருத்தல் வேண்டும்.

இரண்டாம் நூற்பா :

முதல்வன் இவ்வுலகைப் படைக்கும்போது உயிர்களோடு கலந்து ஒன்றாய், பொருட்டன்மையாய், வேறாய் உயிர்க்குயிராகும் தன்மையினால் உடனாய் நின்று செலுத்திப் படைப்பன். அவ்வாறு படைக்கும்போது, அவ்வுயிர்கள் முற்பிறவிகளில் தாம் செய்த வினைகளுக்கேற்ப உடல் முதலியவற்றைப் பெற்றுப் பிறந்தும் இறந்தும் வருமாறு அவற்றைத் தான் செய்யும் ஐந்தொழில்களுள் அகப்படுத்தி நடத்துவன். அம்முதல்வன் தானும் தன் சத்தியுமெனத் தன்னுள் இருவகையாக நின்று உலகினை நடத்துவன்.

மூன்றாம் நூற்பா :

உடல்தோறும் காணப்பெறும் ஒழுங்கான அறிவு செயல்களுக்கு மூலமாய், யான் என்னும் உணர்வு வடிவில் விளங்குவதே உயிர்; அது தான் யாது என்று ஆராய்ந்தவர் பலவகையாகப் பகர்வர். நான் இதுவன்று அதுவன்று என்று கூறுவது ஒன்று உண்டு ஆகலானும், எனது உடல் என்று உடலைக் கூறுவது ஒன்று உண்டு ஆகலானும், ஐம்பொறிகளையும் அவற்றின் நீக்கத்தையும் அறியும் அறிவு உடைய தொன்று இருத்தலானும், துயின்றபோது உணவும் செயலும் இல்லாத தொன்றும் இருத்தலானும், ஒன்றை உணரச் செய்யும்போது உணர்வ தொன்று இருத்தலானும் மாயையால் ஆகிய கருவியாகிய உடம்பினுள் உயிர் என்ற ஒன்று வேறாக உள்ளது என்று அறியலாம்.

நான்காம் நூற்பா :

உயிர் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக்கருவிகளுள் ஒன்று அன்று; அரசனுக்கு அமைச்சன்போல அவற்றைத் துணையாகக் கொண்டுள்ளது. தன்னுடன் எப்போதும் உள்ள ஆணவ மலத்தினால் பொருள்களை உயிர் தானே அறியமாட்டாது. அமைச்சர்களோடு கூடி நின்று தொழில் நடத்தும் வேந்தன் போல அந்தக் கரணங்களாகிய அகக்கருவிகளோடு கூடிநின்று நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்பு, அடங்கல் ஆகிய ஐந்து உணர்வு நிலைகளில் இறங்கியும் ஏறியும் வரும்.

(தொடரும்)

உ

சிவமயம்

ஒரு பாட்டின் உண்மையுரை

உணர்வொளி, காஞ்சி.

சைவ சித்தாந்தம் பதி. பசு, பாசம் மூன்றும் என்றும் உண்டு என்ற கொள்கையது. திருவாசகத்துள் 'மூலமாகிய மும்மலம்' 'மலங்கள் ஐந்து' என்றபடி பாசம் மூன்றும் ஐந்துமாகப் பிரித்துக் கூறுதல் ஆகம நியமனம். பசுக்கள் எண்ணில் அடங்காதவை. அவை பாசத்தாற் கட்டுண்டமையாலே பசு எனப்படும். "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினையடைய முத்தி" என்றது தமிழ்ச் சிவாகமம் (சிவஞானசித்தியார்).

பாசத்தை விடுதல் வீடு. பதியினையடைதல் பேறு. இரண்டும் (வீடும் பெறும்) இயைந்தே வடசொல்லால் 'முத்திலாபம்' எனப்படும். முக்தி-வீடு, லாபம்-பேறு. உயிர்கள் பசுத்துவம் (மலத்தோடு கூடிய தன்மை) நீங்கல் ஒரு பகுதி. பதியையடையுஞ் சிவத்துவம் ஓங்கல் ஒரு பகுதி. இருபகுதியும் ஒன்ருதலே அம் முத்திலாபம், மோட்சலாபம். நோய்நீக்கம் வலம் எய்தல் இரண்டும் சேர்ந்ததே நலம். நோய் நீங்கல் மட்டும் நலமாகாது. வன்மையுருமல் உடம்பில் உயிர் இருந்நால் என்னே பயன் ?

பாசத்தின் பிரிவு முற்குறித்த மூன்றும் ஐந்தும் ஆம். அவை 1 ஆணவமூலமலம், 2 திரோதாயி, 3 மாயை, 4 கன்மம், 5 மாமாயைத் திரட்சி (மாயேயம்).

1. "(மோகம்மிக உயிர்கள்தொறும் உடனுய் நிற்கும்) மூலவாணவம் ஒன்று.
2. (முயங்கிநின்று பாகம்மிக உதவு) திரோதாயி ஒன்று.
3. (பகர்) மாயை ஒன்று.
4. (படர்) கன்மம் ஒன்று.
5. (தேகம்உறுகரணமொடு புவன போகச்செயல் ஆரும்) மாமாயைத் திரட்சி ஒன்று

என்று ஆக மலம் ஐந்து என்பர். ஐந்தும் மாருது அருள் என்பது அரிது என்பர் அறிந்துளோரே" என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தம் (32) மலம் ஐந்தனுடைய பெயரைச் சிறிதுவிளக்கத்தொடு கூறியவாறு உணர்க

'கன்மமும் மூலம் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்' என்றது மேற் குறித்த தமிழ்ச் சிவாகமம், எனவே கன்மம் எனப்படுவது மூலகன்மம் காமியகன்மம் என இருவகைப்படும் எனல் வெளிப்படும்.

சிவப்பிரகாசம் சிந்தனையுரையிலே (24)

"மூலமலத்தின் காரியமாய் மூன்று மலத்திற்கும் முன்னையதாய் மூன்று மலம் மூன்று அவத்தையென்று நின்றுசெய்யும் இருவினையையே ஈண்டு முன்னைவினை எனக் கூறியது என்று அறிக. இது தொண்டர் சீர்பரவுவார் ஆகிய அருண்மொழித் தேவர், கண்ணப்பர் நாயனுர் புராணத்திலே (154).

"முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றும்அற
அன்புபிழம்பாய்த் திரிவார் அவர்கருத்தின் அளவினரோ"

என்றருளினார்.

இதிலே 1. யாக்கையின்பரிசும்

3. வினையிரண்டும்

2. மலமூன்றும் என மூவேறுஆக ஆறு கூறியவாறுணர்க. உணரின் இருவினை வேறு மும்மலம் வேறு என்பது தெளிவுறும். அது தெளிந்தார்க்கு அச் சேக்கிழார் பெருமகனார், திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே (129)

"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய்யஞ்செழுத்து, அரசை, இக்கடல்
ஒருகல் மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ"

எனப் பாடியருளியது ஒரு சிறிதும் ஐயுற இடம் கொடாது.

இப்பாடலுள் 'அஞ்செழுத்து' என்றது வினைமுதல் (எழுவாய்). வினை (1) 'ஏறிட அருளல் (2) ஏற்றிடல்.' இவ்விரண்டு வினைக்கும் முதல் (கர்த்தா) ஆகிய அஞ்செழுத்து, மாக்களை ஏறிட அருளும் பெருமையுடையது. அம் மாக்கள் எங்கு ஏற? கரையில் ஏற. எங்குநின்றும் ஏற? கடலினின்றும் ஏற. அக்கடலில் மாக்கள் சேர்ந்தது எப்படி? கடலில் வீழ்கின்றனர். ஏன்? கல்லொடு சேர்த்துக் கயிற்றால் கட்டப்படுதலால். மக்கள் என்னாது மாக்கள் என்றது ஏன்? "மாவும் மாக்களும் ஐயறி வினவே" என்றது தொல்காப்பியம். 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றதும். அதுவே 'கடலில் வீழ்மாக்கள்' அறிவிற் குறைந்தவரே யாவர். கடலில் வீழ்வதும் கரையேறாமையும் அறிவாமோ? தாம் வீழ்ந்த கடலினின்றும் கரையேறுவது இயலுமானால், ஏறிடல் கூடும். இயலாதேல் வீழ்ந்த கடலில் ஆழ்ந்து வருந்துவதேயன்றி வேறு என்ன செய்யமுடியும்? அம்மாக்கள் கட்டப்பட்டதற்குக் கருவியும் ஒன்று அன்று; இரண்டு. மாக்கள் இரண்டாலே மூன்றோடு கட்டுற்று வீழ்ந்த கடல் உவர்க்கடல் அன்று. பவ(பிறவி)க்கடல். பரிமேலழகர் பத்தாவது குறளுரைக்கண், "காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் 'பிறவிப்பெருங்கடல்' என்றார்." எனத் திருவள்ளுவரது திருவாய் மொழியொன்றன் உட்கிடையை விளக்கினார். அதனால், அக்கடல் பிறவிக்கடல் என்பதும் அது பெருங்கடல் என்பதும் யாவர்க்கும் நன்கு தெரியும். அப் பிறவிப் பெருங்கடலை நீந்துதல் இன்றியமையாதது. அந்நீத்தம்உறவேண்டின் இறைவனடி சேர்தல் வேண்டும். சேர்தல்-இடைவிடாது நினைத்தல். (3. உரை) இறைவன் பொருள் சேர்புகழைப் புரிதலும் வேண்டும். உள்ளம் உரை உடல் ஆகிய முப்பொறி (திரிகரணத்து)க்கும் ஒருமை நிகழ்ச்சி இருப்பின் அன்றிப் பயன் எய்தாது உயிர். மலர்மிசையேகினான் மாணடிசேர்தல் உள்ளத்து நிகழ்ச்சியாயது. இடைவிடாது நினைத்தல் அது. இறைவன் பொருள் சேர்புகழைப் புரிதல் உரைநிகழ்ச்சி. புரிதல்-எப்பொழுதுஞ் சொல்லுதல். (5. உரை) பொறிவாயில் ஐந்து அவித்தான்பொய்தீர் ஒழுக்கநெறி நிற்றல் உடலது

நிகழ்ச்சியுமாம். ஆதலால், "இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறிநிற்றலும் செய்தார் வீடுபெறுவர்" என்றது அவரது விளக்க வுரை.

கடலில் வீழ்கின்ற மாக்கள், கரையேறாது தொடர்ச்சியாய் வருந்து தற்குக் காரணம் கல்லொடு கட்டப்பட்டிருத்தலேயாகும். அக்கட்டுப் பாட்டிற்கு ஒரு கருவி யாயது கயிறு. கயிற்றைப் பாசம் என்பர் வட சொல்லர். பிறவிக்கடலில் வீழும் மாக்களைக் கட்டுங்கயிறு இருவினை. அக்கயிற்றாற் சேர்த்துக் கட்டப்படுங்கல் மூன்றும் மும்மலம். மும்மலக் கல்லொடு சேர்த்து இருவினைக் கயிற்றாற் கட்டப்பட்டும் உயிர்கள் மக்க ளின் வேறாய மாக்கள். அவர்கள் அறத்தின் சார்புற்று, இறைவன் பொருள்சேர் புகழைப் புரிந்தனர். திருவைந்தெழுத்தை ஓதினர், ஓதிய தால், இருவினைக்கட்டு அவிழ்ந்தது. அவ்விருவினைச்சார்பு அறியாமை யால் உண்டாயிற்று. அறியாமை உள்ளிருள். அவ்விருள் புறத்திருளி னும் கொடியது. புறத்திருள் பிறபொருளைக் காட்டாது. தன்னுரு வத்தைக் காட்டும். அகத்திருள் உயிரையும் உயிருக்குயிராய உணர்வை யும் காட்டாது. தன்னையும் காட்டாது. அக்கொடிய இருள்தான் இரு வினைக்கு முதல். அதனால்தான் திருவள்ளுவர் 'இருள்சேர் இருவினை' என்றார். இறைவனது பொருள்சேர்புகழ் திருவைந்தெழுத்தை இடை விடாது எப்பொழுதுஞ் சொல்லும் அறம் உற்றார் மாட்டு இருள்சேரிரு வினையுஞ் சாராதொழியும், அவ்விருவினைக் கயிறு அறுந்தகன்றது. அவ் வகற்சி மும்மலக் கல்லும் விட்டொழிதற்கு ஏதுவாயிற்று. கல்லும் கட்டும் ஒழியவே மாக்கள் கரையேறினர். "அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற்கட்டிப் புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்குமூடி மலஞ் சோரும் ஒன்பது வாயிற்குடில்" வேறு என்றும் இருவினைப் பாசத்தால் மும்மலக்கல்லின் ஆர்த்தலின் காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரை யின்றி வரும் பிறவிக்கடல் வேறு என்றும் அறிஞர் கருதார்.

'திருவஞ்செழுத்து' வேறு 'அருள்' வேறு அல்ல. 'அஞ்செழுத் தருள் நிலை' என்னும் தொடரே அதனை உணர்த்தும். "ஆதியும் அந்த மும் இல்லா அரும்பெருஞ் சோதி" வேறு அன்று "அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்தருள்" வேறன்று. அஞ்செழுத்து, இரும்புதரு மனத்தரையும் ஈர்த்து ஈர்த்து, எலும்பையும் உருக்கிக் கரும்புதரு சுவையை ஒப்பெனக்கருதி ஒருவாறு களிக்கச்செய்யும் அளவில்லாத பேரின்பம் விளைக்கும் ஆற்றல் உடையது அத்திருவைந்தெழுத்து. என் புள்ளுருக்கி, இருவினையை ஈடழித்துத் துன்பம் களைவதும் மட்டும் அன்று. துவந்துவங்கள் தூய்மைசெய்யும் பேராற்றல் அஞ்செழுத்துக்கு அன்றி மற்று எதற்கும் இல்லை. முன்புள்ளபற்றை முழுதும் அழிக்கும் வன்மை அதற்கே உண்டு. அதனைச் சேக்கிழார் அருளியவாறு உணர்தல் வேண்டும்.

"அஞ்செழுத்து அருளும்; ஏறிட அருளும்; மாக்கள் ஏறிட அருளும்; வீழ்மாக்கள், கடலில் வீழ்மாக்கள், பவக்கடலில் வீழ்மாக்கள் ஏறிட அருளும். (காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி) வருபவக்கடல். ஆர்த்தலின் பவக்கடலில் வீழ்(கின்றனர் மாக்கள்). எவற்றொடு ஆர்த் தலின்? கல்லொடு ஆர்த்தலின். என்னகல்? மலக்கல். எத்தனை மலம்? மும்மலம். மும்மலக்கல்லும் ஒருகல்லோ முக்கல்லோ? மலத் தைக் கல்லாக வுருவகம் செய்ததால், மலம் மூன்றும் கல்மூன்றாயின. ஒருகல்லாயின் ஒருகயிறு போதும். இரு கயிறு வேண்டா. மலக்கல் மூன்றாயவாற்றால் வினைக்கயிறு இரண்டு வேண்டும். இத்திறத்தில்

அமைந்த வாக்கியம் இது :-இருவினையாய பாசத்தால் (—கயிற்ருல்) மூன்றுமலக் கல்லொடு சேர்ந்து ஆர்த்தலின் (—கட்டப்பட்டதால்) வருபவம் (—பிறவி) ஆகிய கடலில் வீழும் மாக்கள் (—ஆன்மாக்கள்) (பேரினபக்) கரையில் ஏறிட அருளும் மெய்ம்மையுள்ள திருமந்திரம் அஞ்செழுத்து. இதுவரையில், அஞ்செழுத்தின் இயல்பாய நிகரிலாப் பெருமை உணர்த்தப்பட்டது. இனிச் செயற்கையாய் நிகழ்ந்த சிறப்பு உணர்த்தப்படுசிறது. அது.

"அரசை இக்கடல் ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்கவேண்டுமோ?" என்பது. இதில் 'அரசு' என்றது செயப்படுபொருள். அதனை "ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" யாலறியலாம். அஞ்செழுத்து எழுவாய். அரசு செயற்படுபொருள். ஏற்றிடல் தொழிற்பெயர்ப் பயனிலை. அப்பயனிலையை இரண்டனுருபுவிரித்து, ஏற்றிடல் எனச் செயப்பொருளாக்கி உரைக்கவேண்டுமோ என்னும் வினப் பயனிலையொடு முடித்தல் கிளவியாக்கம் அறிந்தோர் கடனுகும், அஃதறியாது தம் அறியாமை தோன்றக் கிளவிப் பிழை தோற்றலாமோ? அஞ்செழுத்தரசு என்று தொகைப் பெயராகக் கொண்டால், பாட்டின் உண்மைப் பொருளை உணர்ந்ததாமோ? 'இருவினைப் பாசம்' என்றதால் ஒருகயிறு என்றும், 'மும்மலக்கல்' என்றதால் 'ஒருகல்' என்றும், 'பவக்கடல்' என்றதால் 'இக்கடல்' என்றும், 'மாக்கள் ஏறிட' என இயல்புணரச் சொல்லியதால், செயற்கையுணர்த்தி, "ஏற்றிடல்" என்றும், கேட்டோரும் கற்ருேரும் கருதவைத்த சேக்கிழாரது செந்தமிழ்ச் செய்யுட்டிறத்தை அளவிட நம் ஆசாரியர் உமாபதி சிவனுர்க்கு எளிது அல்லது எத்தேவர்க்கும் அரிதேயாம்.

இரண்டு கயிறு கொண்டு மூன்று கல்லோடு சேர்த்துக் கட்டிப் போகவிடப் பிறவிக்கடலில் வீழ்மாக்களைப் பேரின்பக்கரையிற் சேர ஏறச் செய்ய வல்ல திருவைந்தெழுத்து, நம் அப்பர் திருநாவுக்கரசரை இ(வ்வுவர்)க் கடலில், வெறுங்கயிறு கொண்டு கட்டிப் போகவிட்ட ஒரு கல்லின்மேல் மிதக்கச் செய்து கரையேற்றுதலைச் சொல்ல வேண்டுமோ? மூன்று மடங்கு வன்மைமிக்க அஞ்செழுத்து, ஒருமடங்கும் அளவுருத ஒன்றில் வன்மையுடையது எனின், அத்திருமந்திரத்துக்கு என்ன பெருமை புதியதாகக் கூடலாகும்?

"இருவினைப் பாசமும்—நல்வினை தீவினை என்ற கயிறும். மலக்கல்-ஆணவமலம் என்ற கல்லும், அருளும்-துணை அருளும்," என்று "அரும்பதவிசேட ஆராய்ச்சிக் குறிப்புரை" எழுதியது பொருந்துமோ?

'அஞ்செழுத்தரசு என்று சேக்கிழார் வாகீசப் பெருந்தகையை அறிமுகப்படுத்துகிருர்' என்றெழுதியதுந் தகுமோ"

அரசை அஞ்செழுத்து ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ? இவ்வாறுள்ளதில், அஞ்செழுத்தரசு எனக் கொண்டது சிறிதும் தகாது.

பக்தபஞ்சாட்சரம் என்பது இங்கு வேண்டுவதன்று ஞானசம்பந்தர், நாவுக்கரசு, சுந்தரமூர்த்தி, மணிவாசகர் என்பவற்றை ஒற்று நீக்கி ஐந்தெழுத்து எனக் கொண்டு பக்தபஞ்சாட்சரம் என்பர். அஞ்செழுத்தரசு என்று பிழைபடக் கொண்டதும் அதுபக்தபஞ்சாக்ஷரம் ஆகும் என்பதும் பொருந்துமோ?

திருமாலடியார்

இராமானுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(5)

இராமானுசர் கோயிலுக்குச் சென்று பேரருளாளனை வணங்கி விடை பெற்றுக் கொண்டு திருக்கச்சிநம்பிகளின் ஆணைப்படித் திருவரங்கத்திற்குப் புறப்பட்டார். வழியில் மதுராந்தகம் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டுள்ள ஏரிகாத்த பெருமாளாகிய இராமபிரானை வழிபட வேண்டுமென்ற வேட்கையால் அங்குச் சென்றார். அவ்விடத்தில் ஏற்கனவே வந்து தங்கியிருந்த பெரியநம்பிகளைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். நாம் பெறக் கருதிய பெரியநம்பிகளின் திருவருள் இவ்விதம் இடைவழியிலேயே வாய்த்ததே என்று எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிய, பெரிய நம்பிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். பெரியநம்பிகளும் திருவரங்கன் ஆணைப்படி ஆளவந்தாருக்குப் பின்பு இராமானுசரையே வைணவத்திரு தழைத்தோங்க ஆசாரியராக நியமிக்க விருப்பங்கொண்டிருந்தார். ஆதலால் இளையாழ்வாராகிய இராமானுசரை வாரி அணைத்துக் கொண்டார்.

இராமானுசருடம் உடனே பெரியநம்பிகளிடம் தமக்குத் திருமந்திரத்தை உபதேசித்தருள வேண்டுமென்று வேண்டினார். நம்பிகளும் இராமானுசரை நோக்கி அன்பரே! நாம் பெருமாள் கோவிலாகிற காஞ்சிபுரத்துக்குச் சென்று அப்பெருமாள் முன்னே உமக்குத் திருமந்திரத்தை உபதேசிக்கிறோம் என்று கூறினார். இராமானுசர் "பெரியீர் இந்த சரீரம் நிலையற்றதன்றோ! யாக்கை நிலையாமையை ஆளவந்தாரிடம் காணவில்லையா? ஆதலால் காலம் தாழ்த்தாமல் இங்கு இப்பொழுதே அடியேனை ஆட்கொண்டு, திருமந்திரத்தை அருளல் வேண்டும் என்று பெரிய நம்பிகளின் திருவடிகளில் வீழ்ந்து எழுந்திராதேயிருந்தார். நம்பிகளும் இராமானுசருடைய பக்தி மேம்பாட்டைப் பாராட்டி உமக்கு இப்பொழுதே திருமந்திரத்தை உபதேசிக்கிறோம் என்று சொல்லி அவரை ஏரிகாத்தபெருமாள் கோவிலுக்குள் அழைத்துச் சென்றார். அங்குத் திருச்சுற்றிலுள்ள மகிழ மரத்தடியில் அமர்ந்து, முதலில் இராமானுசருக்குத் திருவிலச்சினையைத் (சங்கு சக்கரப்பொறியை) திருத்தோள்களில் பொறித்தார். பிறகு அவரைத் தம்முடைய வலத்தொடையின் மீதமர்த்தித் தம் குரவராகிய ஆளவந்தாரைத் தியானித்து திருமந்திரத்தையும், துவயம் என்னும் மகாமந்திரத்தையும் முறைப்படி ஓதியருளினார்.

பிறகு நம்பிகள் இராமானுசரை நோக்கி "அன்பரே முன்பு இராமபிரான் காட்டிற்குச் சென்ற காலத்தில், பரதாழ்வான் தலையில் தம்முடைய திருவடிகளாகிற பாதுகைகளை வைத்துச் சென்றாற்போல,

ஆளவந்தாரும் உமக்காகத் தம் திருவடி நிலைகளை என் மீது வைத்துப் போயினார் என்று அறிந்து, ஆளவந்தார் பக்கல் மிகவும் பரிவும் பக்தியும் கொண்டு திருமால் சமயத்தை எங்கும் பரப்பி வாழ்வீராக" என்று வாழ்த்தியருளினார். அவ்வாழ்த்து இராமாநுசருக்கு ஒரு பெரும் பொறுப்புணர்ச்சியை ஊட்டிற்று. ஆளவந்தாரே பெரியநம்பிகள் உருவில் வந்து உபதேசித்ததாகக் கொண்டார். பெரியநம்பிகளும் இராமாநுசரை நோக்கி 'நீர் இப்போது உபதேசம் பெற்றது என்னிட மன்று, ஆளவந்தாரிடமேதான்!' என்று தெரிவித்தார். இக்கருத்தையே பின்னாளில் திருவரங்கத்தமுதனார் 'யமுனைத் துறைவன் இணையடியாம் கதிபெற்றுடைய இராமாநுசன்' என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விதம் பெரியநம்பியும் இராமாநுசரும் அன்று முழுதும் மதுராந்தகத்திலேயே தங்கி, ஆளவந்தாருடைய கொள்கைகளையும், வைணவசமயத்தின் சீர்மைகளையும் பேசிப் பொழுது போக்கினர். முடிவில் இராமாநுசர் நம்பிகளை நோக்கிப் பெரியீர் இனிச் செய்வது யாது என்று வினவினார்? உடனே பெரியநம்பிகள் இராமாநுசரையும், உடன் வந்திருந்த தம் தேவியையும் அழைத்துக் கொண்டு காஞ்சிபுரத்திற்கு வந்து, அத்திகிரி அருளாளரான வரதராசப் பெருமாளை வணங்கி இப்பெருமாளே நமக்கு எல்லாவற்றுக்கும் வழிகாட்டியாவார் என்று உபதேசித்தார்.

இவ்விதம் நம்பிகளும் இராமாநுசரும் பெருமாளைச் சேவித்த பின்பு, இராமாநுசர் நம்பிகளையும் அவருடைய தேவிகளையும் வணங்கித் தம் இல்லத்தின் ஒருபகுதியிலேயே அவர்களைத் தங்கி வசிக்கும்படி வேண்டிக் கொண்டார். நம்பிகளும் அவருடைய வேண்டுகோளை ஏற்றுத் தம்மனைவியுடன் இராமாநுசருடைய இல்லத்திலேயே தங்கிப் பெருமாளைச் சேவித்து வரலானார். இராமாநுசரும் தம்குருவினுடைய எல்லா வசதிகளையும் கவனித்துக் கொண்டார். ஒவ்வொரு நாளும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிற திவ்வியப்பிரபந்தங்களையும் அதன் பொருள்களையும் பெரியநம்பியிடம் கற்று வந்தார். இவ்விதம் செவிக்கினிய செஞ்சொல்லாகிற பிரபந்தங்களையும், மற்றும் வியாச முனிவரின் சூத்திரங்களையும்: வேதார்த்தங்களையும் இணைத்து நம்பிகள் போதித்து வந்தார். இப்படி முறையாகக் கற்றதால் ஆழ்வார்களின் மீதும், அவர்களுடைய பிரபந்தங்களின் மீதும் இராமாநுசருக்குத் தணியாத ஆவலும், பக்தியும் மிகுவதாயிற்று.

இராமாநுசர் துறவியாதல்

இங்ஙனம் இராமாநுசரும் பெரியநம்பிகளும் இணைந்து வாழ்ந்து வரும் நாளில் ஒருநாள் இராமாநுசருக்கு எண்ணெய்க் காப்பிட வந்த ஒரு வைணவர் பசியால் வருந்துகிறேன் என்று கூறினார். உடனே இராமாநுசர் தம் மனைவியைக் கூப்பிட்டு இவருக்கு அன்னம் இடு, மிகவும் பசித்திருக்கிறார் என்று கூறினார். அதற்கு அவ்வம்மையார் அன்னம் இன்னும் ஆகவில்லை என்றாள். நேற்றுச் சமைத்த பழையதை யாவது இவருக்குக் கொடு என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குச் சென்று விட்டார். அவ்வம்மையார் வேறு வேலையில் ஈடுபட்டுக் கணவர் சொன்னதைச் செய்யாமல் அப்பழையதும் இல்லையென்று அவ்வைணவரி டம் சொல்லியனுப்பிவிட்டார். அவரும் கோயிலுக்குச் சென்று இராமா நுசரிடம் கூறவே, கருணையுள்ளம் படைத்த இராமாநுசர் இப்படியும் நேர்ந்ததே என்று வருந்தி அங்குள்ள பரிசாரகரிடம் கேட்டு அவருக்குக் கோயிற் பிரசாதத்தை வாங்கியருளினார். பின்பு வீட்டுக்கு வந்தவுடன் தம் மனைவியை வேறு வேலையாகப் பக்கத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு

உள்ளே சென்று அன்னம் உள்ளதா என்பதை அறிய முயன்ருர். சென்று பார்த்ததில் நிரம்ப அன்னமிருப்பதை அறிந்தார். உடனே மனைவியை அழைத்து ஒரு வைணவர், பசியால் நலிவுறக் கண்டும் நீ இப்படிச் செய்தாயே! இது தகுமா? முறையா என்று மிகவும் சினந்து கூறினர். இவ்விதம் பகவானுடைய தொண்டர்களிடம் அடிக்கடி தவறு செய்வதை இராமாநுசரால் பொறுக்க முடியவில்லை. பின்பு திருக்கச்சி நம்பியிடம் சாதி கருதி தவறு செய்ததும், இப்போது பசித்த வைணவத் தொண்டர்க்கு உணவில்லையென்று பொய்கூறியதும் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது. இப்படியிருக்கும்போது சில தினங்களில் தஞ்சமாம்பாள் மன்னிக்க முடியாத மூன்ருவது குற்றத்தையும் செய்துவிட்டாள்.

ஒருநாள் பெரியநம்பிகளுடைய இல்லக்கிழத்தியும் இளையாழ்வாராகிய இராமாநுசருடைய மனைவியும் தண்ணீர் முகந்து வருவதற்காகக் குடங்களை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த கிணற்றுக்குச் சென்ருர்கள். அங்கு கிணற்றிலிருந்து விரைவாகத் தண்ணீரை முகக்கையில், பெரிய நம்பிகளுடைய மனைவியின் குடத்து நீர் தளும்பி, இராமாநுசருடைய மனைவியாரது குடத்தில் விழுந்தது. அதனுல் இராமாநுசருடைய மனைவியாகிய தஞ்சமாம்பாள் மிகவும் சினம் கொண்டு, பெரியநம்பிகளிகளுடைய தேவியாரை இழித்துப்பேசினர். அதாவது இரண்டு பேரும் பார்ப்பனராக இருந்தும் பெரியநம்பிகளின் குலம் தாழ்ந்தது என்று எண்ணி விட்டாள் தஞ்சமாம்பாள். "குலத்தாலும் செல்வத்தாலும் தாழ்ந்திருந்தும் குருபத்தினி" என்ற செருக்கோ உனக்கு என்று வாய் கூசாமல் பெரிய நம்பிகளுடைய மனைவியின் மனம் புண்படும்படி கேட்டு விட்டாள். நம்பிகளின் மனைவி ஒன்றும் பேசாமல் கண்களில் நீர் வழிய வீட்டுக்குச் சென்று விட்டாள். பெரியநம்பிகளும் தேவியரைப் பார்த்து ஏன் கண் கலங்கியுள்ளாய் என்று வினவினர்? அவ்வம்மையாரும் நடந்த செய்தியைக் கூறினர். அதைக்கேட்ட பெரியநம்பிகளும் இனி இங்கிருந்தால் அடிக்கடி இப்படி ஏதேனும் நிகழும். அதனுல் பாகவத அபசாரம் உண்டாகும் என்று சொல்லி மனைவியோடு திருவரங்கத்திற்குப் புறப்பட்டுவிட்டார்.

இராமாநுசர் தம் இல்லம் புகுந்து மனைவியை அழைத்தார். அவளும் வந்து நின்ருள். ஆயினும் வழக்கத்திற்கு மாருக அவ்வம்மையாருடைய முகம் மாறியிருப்பதைப் பார்த்தார். ஏதோ நிகழ்ந்து விட்டது என்று உணர்ந்தார். உடனே வழக்கம்போல் தம் குருவான பெரியநம்பியை வணங்கிவிட்டு வரவேண்டுமென்று எண்ணி அவருடைய பகுதிக்குச் சென்ருர். அங்கு தம் ஆசாரியரைக் காணுமையால் மற்றவர்களிடம் கேட்டபொழுது மனைவியுடன் அவர் திருவரங்கம் சென்றுவிட்ட செய்தியை அறிந்தார். அதற்குக் காரணம் யாது என்று கேட்டறிந்தார்? கிணற்றில் நீர் கொண்டுவரச் சென்றவர்களிடையே ஏற்பட்ட வாய்ச் சண்டையே என்பதை அறிந்தார். தம்மனைவியாகிய தஞ்சமாம்பாளின் செய்கையிலேதான் குற்றமென்பதை அறிந்தார். இப்படி அடுக்கடுக்காகத் தமக்கு ஏலாத வகையில் குற்றம் புரிந்துவரும் மனைவியோடு எப்படி வாழ்வது என்று சிந்திக்கலானர். பெரிய நம்பிகளின் பிரிவு அவரை மிகவும் வாட்டியது. கலங்கிய மனத்தோடு தம் இல்லம் புகுந்தார். அவர் மனைவியோ ஒருவிதக் கலக்கமுமின்றிப் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். இராமாநுசர் தம் மனைவியை நோக்கி நீ முன்பு திருக்கச்சிநம்பியிடமும், இப்பொழுது பெரியநம்பியிடமும் அபசாரப் பட்டுள்ளாய். இவை போதாவென்று பசித்து வந்த வைணவருக்கு

உணவில்லையென்று பொய் கூறினாய். இவைகளையெல்லாம் என்னால் எவ்வாறு பொறுத்துக்கொள்ள முடியும் என்று கடிந்து சினத்தோடு கேட்டார். தஞ்சமாம்பாளும் ஏதோ பொருந்தாத பதிலுரைகளைக் கூறி இராமாநுசருடைய சினத்தை அதிகமாக்கி விட்டாள்.

இராமாநுசர் அமைதியாகச் சில நிமிடங்கள் சிந்தித்துப் பின்பு பேரருளாளனை உள்ளத்தால் தியானித்துத் தம்மனைவியை நோக்கி உன்னோடு இணைந்து இல்லறத்தில் வாழ்ந்து நான் அடையக்கூடிய பயன் ஒன்றுமில்லை. என்னுடைய குறிக்கோளுக்கு ஏற்றவகையில் நீ நடந்து கொள்வதில்லை. ஆதலால் இனி உன்னுடைய செல்வங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு உன் பெற்றோரிடம் சென்று இறைபணிகளில் ஈடுபட்டு வாழ்வாயாக என்று கட்டளையிட்டார். தஞ்சமாம்பாளும் இராமாநுசரை வணங்கி அவருடைய கட்டளைப்படியே தம் பிறந்தகத்திற்குச் சென்றுவிட்டார், பிறகு இராமாநுசர் பேரருளாளராகிய வரதராசப்பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாளைத் தண்டனிட்டு வணங்கி 'எம்பெருமானே எப்பொழுதும் உமக்கும் உம்மடியார்க்கும் தொண்டு செய்யவே என்மனம் விரும்புகிறது. அதற்கு இந்த இல்லறம் என்வரையில் இடையூறாக உள்ளது. ஆதலால் நீர் கட்டளையிட்டால் யான் துறவறத்தை மேற்கொள்ளலாம் என்று எண்ணியுள்ளேன் பெருமாளின் விருப்பத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று வேண்டினார். வரதராசப்பெருமாளும் வைணவ உலகுக்கு இராமாநுசரைக் கொண்டு எவ்வளவோ நன்மைகளைச் செய்யவேண்டுமென்று திருவுள்ளம் பற்றினார், ஆதலால் இராமாநுசருக்கு அவருடைய குறிக்கோள்களை நிறைவேற்ற இல்லறம் தடையாயிருப்பதால் துறவு மேற்கொள்ளும்படி, அருச்சகரின் வழியாக அனுமதி அளித்தார். உடனே இராமாநுசரும் சத்திய விரத க்ஷேத்திரமாகிய அக்காஞ்சிபுரத்தில், புண்ணியகோடி விமானத்தின் நிழலில் அனந்தபுட்கரணிக் கரையில் திரிதண்டமாகிய முக்கோலை ஏற்று, காவி ஆடையையும் அணிந்து கொண்டார். பின்பு வேள்வித் தீமூட்டி அதில் மனைவி போன்ற உறவினர்களையும், மற்ற செல்வங்களையும் ஆகுதியாக்கிவிட்டார். முக்கோல் பகவராகிய இராமாநுசர் அன்றுமுதல் 'யதிராசர்' என்றும் வழங்கப்பட்டார். [யதிராசர் என்றால் துறவிகளுக்குள் அரசர் என்பது பொருள்]

இவ்விதம் வரதராசப்பெருமாளின் கட்டளைப்படியும் வாழ்த்தின்படியும துறவை மேற்கொண்ட இராமாநுசர் "நம்பால் ஆளவந்தார் பண்ணின திருவருள் நன்கு பலித்தது" என்று மகிழ்ந்தார். இனி நாம் ஆளவந்தார் விழைந்தவற்றைச் செய்து முடிக்கவேண்டும் என்று விரும்பினார். அதற்கு ஏற்ற வகையில் தம்முடன் நம்பிக்கையோடு பணியாற்றத்தக்க ஒருவர் வேண்டுமே என்று சிந்தித்தார். உடனே இராமாநுசருக்கு கோவிந்தபட்டரின் நினைவு வந்தது. அக்கோவிந்தனே தகுந்தவன். பற்றற்றவன், தூயமனத்தினன், பலநூற்கருத்துக்களையும் ஓதியுணர்ந்தவன். ஆனால் அவன் இப்போது சைவசமயத்திலீடுபட்டுக் காளத்தியில் தங்கியுள்ளானே! அவனை எப்படியாவது நமது வைணவ உலகுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கருதினார். அதற்குத் தக்கவர் யார் என்று சிந்திக்கலானார். உடனே "திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்தெம்பெருமானை" எப்பொழுதும் மறவாமல் தொண்டு செய்துவரும் பெரிய நம்பிகளே ஏற்றவர் என்று முடிவு செய்தார். எப்படியாவது காளத்திநாதனிடமிருந்து நம் கோவிந்தனைப் பிரித்து வைணவத்துக்கு வழங்கியருளுமாறு ஒரு தொண்டர் வழியாகப் பெரிய திருமலைநம்பிகளுக்கு ஓலை எழுதி அனுப்பினார்.

(தொடரும்)

மானக்கஞ்சாற நாயனர்

—:×:—

கஞ்சாறூரிலே, வேளாளர் குலத்திலே, பரம்பரையாகச் சேனபதியாம் செப்பவருங் குடிவிளங்கத் திரு அவதாரம் செய்தார் மானக்கஞ்சாறர். அவர் சிவபத்தி, அடியார்பத்தியிற் சிறந்தவர். அவர் சில காலம் பிள்ளைப் பேறின்மையால் மிகுந்த துக்கம் கொண்டார். அதன் பொருட்டுச் சிவபெருமானை மனத்தருளால் வருத்தி ஒரு தவப்பெண் கொடியைப் பெற்றெடுத்தார். அப்பெண் மணப்பருவம் அடைந்தாள்.

எஞ்சாத புகழுடைய ஏயர்கோன் கலிக்காமர், சில முதியவர்களை அனுப்பிப் பெண் கேட்க, மானக்கஞ்சாறரும் இசைந்து திருமணம் நிச்சயித்தனர். மணநாளில் ஏயர்கோன் கலிக்காமர் மணக்கோலங் கொண்டு சுற்றத்தார் புடைசூழக் கஞ்சாறூர் வந்தடைந்தார். அவர் வருவதற்கு முன்னரே, சிவபெருமான், மகாவிரத முனிவர் வேடங்கொண்டு, மானக்கஞ்சாறர் மனைப்புகுந்து, அவரை நோக்கி, "இன்று இவ்வில்லத்தில் என்ன மங்கலச் செயல் நிகழப் போகிறது?" என்று கேட்டார். மானக்காஞ்சாறர் தம்மகட்குத் திருமணம் நிகழப்போவதை அறிவித்து, மணமகளை அழைத்து வந்து மகாவிரத முனிவரின் அடிபணியச் செய்தார்.

தம்மை வணங்கியெழுந்த பெண்ணினுடைய கூந்தலைப் பார்த்து "இப்பெண்ணின் கூந்தல் நமக்குப் பஞ்சவடிக்கு உதவும்" என்ருர். உடனே மானக்கஞ்சாறர் தம் வாளை உருவி "இவர் கேட்டற்கு என்ன புண்ணியம் செய்தேனே" என்று, மணப்பெண்ணின் கூந்தலை அரிந்து கொடுக்க, அவர் பத்தி கண்டு மனமகிழ்ந்த சிவபெருமான் புனைவேடம் நீக்கி உமாதேவியாரோடும் இடபாரூடராய்க் காட்சிகொடுத்து, மானக்கஞ்சாறருக்குத் தம்முடைய சந்நிதானத்திலேயே, தம்பெருங்கருணைத் திறத்தைப் புகழ்ந்துகொண்டிருக்கும் பெரும்பேற்றைக் கொடுத்துத் திருவுருக்கரந்தார்.

ஏயர்கோன் கலிக்காமர் கஞ்சாறூர் வந்து சேர்ந்தார். அங்கே நிகழ்ந்தவற்றைக் கேள்வியுற்று மனமகிழ்ந்தார். திருவருளைத் துதித்து "தலைமுடியற்ற பெண்ணை மணங் கொள்ளுதல் மரபன்று" என்று வருந்த, 'மனந்தளரும் இடர் நீங்கி, வானவர் நாயகர் அருளால் புனைந்த மலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம் புணர்ந்து தம்முடைய மூதூருக்குச் சென்றடைந்தார்.

—பழ-தருமஂ. ஆறுமுகம்.

பிரமாதீச ஆண்டு மார்கழித் திங்கள், 5-ஆம் நாள் (20-12-73) வியாழக் கிழமையன்று மானக்கஞ்சாற நாயனரது திருநட்சத்திரமாகிய சுவாதி.